885

[N]o. M. 2210 மலர் 10 இதழ் 12 1933வருட நவ[ம்]பர்ம[ீ]

Authoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(Mrs. V. M. PARTHASARATHY IYENGAR)

ஜகன்மோகினி



கோபாலன்:—ஸ்ரீபாலா! நான் நிற்பதையும் பார்க்காததுபோல வீட்டைத் தாண்டிக்கொண்டு வேகமாகச் செல்கிறாயே! என்ன அவசரம்! உள்ளே வரலாகாதா?

ஸ்ரீபாலன்:—மணியார்டர் டயம் ஆய்விட்டது. தபாலாபீஸுக்கு அவசரமா... ...கிறேன். ஜகன்மோகினிக்குப் பதினொருவதாண்டு இம் மா... ...! அதற்குச் சந்தா அனுப்பப்போகிறேன். திரும் ...

...னும் பணம் தருகிறேன்; சேர்த்து அனுப்பிவிடு.

...மோகினி" ஆபீஸ்,

...டித்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகு...

வருஷ சந்தா ரூ. 1-8-0 தனிப் பிரதி விலை: உள் நாடு, அணா 2: வெளி நாடு, அணா 3

JL,
ஜகன், மோகினி
N33.10.12
3100ரூ.

ஒரு அரிய சந்தர்ப்பம்!

இனி ஸ்திரீகளும்
இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா
அஷியூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது எற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்றதென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரேக்டர்.

OFFICE OF THE REGISTRAR OF ...
7-FEB 1937
MADRAS

3-வது அதிகாரம்

பெற்ற மனம் பித்து பிள்ளை மனங் கல்லு

சந்திராவும் பாலுவும் லக்ஷ்மியை முதலில் அனுப்பிவிட்டார்களேயன்றி அவர்களது மனத்திற்குள் ஏதோ வேலை செய்துகொண்டிருந்தது. "முன் பின்னறியாத அந்த பட்டணத்தில் தள்ளாத கிழவி என்ன செய்வாள் பாவம்?" என்று சிந்தித்தார்கள்.

சந்திரா:—நாதா! தாங்கள் அம்மாளை தனியே அனுப்பியது பிசகு. பட்டணத்தில் எங்கு பார்த்தாலும் கும்பலாம். வீதிகளில் மோட்டாரும், பஸ்களும், டிராம் வண்டிகளும் ஜட்கா வண்டி, மாட்டு வண்டி, சாமான் ஏத்தும் கை வண்டிகள், ரிக்ஷாக்கள், மோட்டார் பைசிகளாம் ஒன்னும், வெறும் சைகிலாம், இன்னும் எத்தனையோ அவஸ்தைகள் எல்லாம் அங்கு உண்டாம். இத்தனை வண்டிகளுக்கு மத்தியில் கிழவனை முத்தனும், அம்மாவும் என்ன செய்வார்கள்? மேலும் சில வீதிகளில் சாயங்கால வேளையில் குதிரைமீது வெள்ளைக்காரர்கள் சுற்றுவார்களாம்; எனக்கேதோ பயமாகத்தானிருக்கிறது. நீங்களாவது போய்ப் பார்க்கிறீர்களா!

பாலு:—சந்திரா! போவதும் பார்ப்பதும் இலேசான காரியமா! அம்மா அப்படி அஜாக்ரதையாக எங்கும் செல்லமாட்டாள். முத்தனும் ஜாக்ரதையாகத்தான் போவான் என்று நினைக்கிறேன். இப்போது நான் போவதென்றால் எங்கே போவது. என்ன செய்வது? மணி வீட்டிற்கென்னவோ நான் போகவே மாட்டேன்! அவன் வீட்டை விசாரித்து நான் அன்னியன்போல வீதியிலிருந்து அங்கு அம்மா வந்து விட்டாளா! என்பதைக் கேட்க வேண்டும். நம் கையிலோ தம்பிடி கிடையாது. கடனை அடைப்பதற்கு வழி இல்லை. நான் என்ன செய்வேன்; இங்கிருந்து பட்டணத்திற்கு நடந்து

செல்வதென்றால் என்னால் முடியுமா என்ற சந்தேகமாயிருக்கிறது. மனமென்னவோ தத்தளிக்கிறது. என்ன செய்வேன்?

சந்தி:—நாதா! நாம் தண்ணீர் மொண்டு வைக்கும் பெரிய அண்டா இருக்கிறதே அதைத் தாங்கள் எங்கேனும் அடகு வைத்தால் ஒரு ரூபாய் கிடைக்கும். இன்று மோர் வித்த காசு எட்டணா இருக்கிறது. ஒன்னரை ரூபாய் போதாதா! அதைக் கொண்டு சென்று அம்மாவைப் பற்றி தெரிந்துகொண்டு வந்து விடுங்கள்.

அச் சமயம் தர்மலிங்கம் இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே வந்து விட்டார். அப்போதுதான் லக்ஷ்மியம்மாள் தன்னிடம் பொய்யுரைத்து விட்டு மணியிடம் போயிருப்பதை அறிந்தார். கோபம் துர்வாஸ மகரிஷிக்குமேலாக வந்துவிட்டது. கண்களில் தீப்பறக்கின்றது. "அடேய் பாலூ! நீயும் உன் மனைவியும் உடந்தையாக இருந்து உன் தாயாரை அனுப்பியதை நான் தெரிந்துகொண்டேன். நான் ஒரு தடியன் இருப்பது அடியோடு மறந்துவிட்டது. கேவலம் பூச்சியாய், புழுவாய் என்னை நினைத்து நடத்துகிறீர்கள். இனி எனக்கு இங்கு என்ன வேலை. நான் தலையில் துணியைப் போட்டுக் கொண்டு எங்கேனும் தொலைந்து போகிறேன்" என்று கிளம்பி விட்டார்.

பாலு அவரைத் தடுத்து நமஸ்காரஞ் செய்து "அப்பா! விஷயத்தை யறியாது தாங்கள் கோபிக்கக் கூடாது. என் மனப் பூர்வமாக அம்மாவை நான் போக விடவில்லை. சந்திராவும் அப்படியே! அம்மா நேற்று பெரிய அமர்க்களம் செய்து என்னையே வித்தியாசமாகப் பேசிவிட்டாள்" என்று நடந்த விவரங்களைக் கூறி இதனால் நான் உன்னிஷ்டம் போலச் செய்யென்று விட்டுவிட்டேன். என்னை கோபிக்காதீர்கள்." என்றான்.

சந்திராவும் மாமனாருக்கு வந்தனஞ் செய்து "மாமா! மாமியின் பேராவலை எத்தகைய விதத்தில் தடுத்தும் பயன்படவில்லை. அவர்கள் எல்லோரையும் மீறித் தானே போய் விடுவதாயும் சொன்னார்கள். அதற்குமேல் என்ன செய்வது? தாங்கள் கோபிக்கக் கூடாது; மன்னிக்க வேண்டும்." என்றாள். கிழவர் அதற்குமேல் என்ன சொல்வார்? விரைத்துக் கொண்டு "அடேய்! நீங்கள் இப்போது பேசியதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அண்டாவையும் சருவத்தையும் அடகு வைக்கக்கூடாது. நீயும் போகக் கூடாது. எந்த தைரியத்தோடு போனாளோ அப்படியே போய் விடட்டும். நீ என்னை மீறி அங்கு சென்றால் பிறகு நான் வீட்டிலிருக்க மாட்டேன். ஜாக்ரதை" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

வாய்ப் பூட்டு போட்டு விட்டதுபோலக் கிழவர் சொல்லி விட்டதால் இருவரும் மேலே ஒன்றும் செய்யக் கூடாமல் குழம்பி விட்டார்கள். இதைப் பற்றியே இருவரும் யோசிக்க லானார்கள். கிழவருக்குத் தெரியாமல் இனி எந்த காரியத்தைச் செய்தாலும் பெரிய குற்றமாகி விடுமே!...உம். கடவுள் விட்ட வழியாகட்டும்!'' என்று தீர்மானித்துக் கொண்டதோடு கிழவி சௌக்கியமாகத் தன் குமாரனிடம் போய்ச் சேர அருள் புரியவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். அன்று சென்றது. மறு தினம் மாலையில் ஓர் தந்திச் சேவகன் வந்து "சார்! தந்தி! தந்தி!'' என்று கூவினான்.



210048

தந்தி என்ற பதத்தைக் கேட்டவுடன் கதிகலங்கிப் போய் விட்ட பாலுவும் சந்திராவும் எழுந்து வீதியில் ஓடி வந்து "தந்தியா! யாருக்கு?" என்றார்கள். தந்திச் சேகவன் "பாலுசாமிக்கு வந்திருக் கிறது" என்றான். பாலுவின் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. தான் மிகவும் கவலைப்பட்டதற்குத் தகுந்தாற் போல தந்தி வந்து விட்டதே என்று பதைபதைத்தவாறு அதை வாங்கி உடைத்துப் படிக்கலானான்.

"அவசரம்! ஆபத்து!

உன் தாயார் வெகு அபாயகரமான நிலைமையில் ஜனரல் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாள். உடனே வரவும்.

முத்தன்."

இதைப் படித்தவுடனே பாலு பேரிடி விழுந்தவன் போலாய் விட்டான். "ஆ! சந்திரா! அம்மாவுக்கு ஏதோ ஆபத்து வந்து விட்டதாம். அவள் ஆஸ்பத்திரியில் கிடக்கிறாளாம். நாம் பயந்த வாறே ஆய்விட்டதே! என்ன ஆபத்து நேர்ந்துவிட்டதோ தெரிய வில்லையே! ரயிலிலேயே ஏதேனும் அபாயம் ஏற்பட்டதோ! அன்றி வேறு என்ன நடந்ததோ! தம்பியைப் பார்த்ததாக இத் தந்தியி லிருந்து தெரியவில்லையே; பார்த்திருந்தால் அவனல்லவோ தந்தி யடித்திருக்கவேண்டும். முத்தன் கையொப்ப மிருக்கிறதே! இச் செய்தி அப்பாவின் செவியில் பட்டால் அனர்த்த மாகிவிடுமே! திட்டுவாரே; என்ன செய்வது?" என்று தத்தளித்தான். சந்திரா வும் வருந்தினாள். "உடனே நாம் புறப்படவேண்டும்" என்று கணவ னுடன் பிடிவாதம் செய்தாள்.

பிறகு இருவரும் தந்தியை எடுத்துக்கொண்டு தர்மலிங்கத்தி னிடம் சென்றார்கள். அவர் அப்போது சர்க்காவில் நூல் நூற்றுக் கொண்டிருந்தார். சந்திராவே முன்னால் சென்று மாமனாரை வணங்கி விட்டு "மாமா! தாங்கள் தயவு செய்து கோபிக்கலாகாது. எத்தனை துஷ்ட மக்களாக விருப்பினும் பெற்றோருக்கு அந்த துஷ்டத்தனத்தைக் கடுமையாகப் பாராட்ட முடியாது" என்று தாங்களே முன்பொரு தினம் எதிர் வீட்டு ஏகாம்பரத்தின் புதல்வி

பின் விஷயத்தில் பேசவில்லையா! அதைத் தாங்கள் மறந்து விட்டீர்களே! பெற்றோர்களிலேயே அன்னையின் பாசத்தைத்தான் அபாரமான ஆழமென்று பெரியோர் கூறியிருக்கிறார்கள். அம்மா விஷயத்தில் தாங்கள் தயவு செய்யவேண்டும். மைத்துனர் தங்களைச் சொல்லியதுபோல என்னையும் சொல்லவில்லையா? நான் ஊரார் வீட்டுப் பெண்தானே! சமயத்தை உத்தேசித்து எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டுதான் போகவேண்டும். இதோ பாருங்கள்; தந்தி வந்திருக்கிறது. சித்தமிரங்கி எங்களுக்கு உத்திரவு கொடுக்க வேண்டும்'' என்று மன்றாடிக் கேட்டாள்.

தந்தி விஷயத்தைக் கேட்பதற்கு முன்பு தர்மலிங்கத்திற்கு சற்று அலக்ஷியமாகத் தோன்றியது. மருமகளின் குண விசேஷத்தைப் பற்றி மெச்சி மகிழ்ந்தார். தந்தியை வாங்கிப் பார்த்ததும் கடுங்கோபம் வந்துவிட்டது. "ஆஹா! நான் நினைத்ததுபோலத்தான் ஆய்விட்டது. பாலு! என்ன விதமான ஆபத்திருக்குமென்று நினைக்கிறாய்?'' என்றார்.

பாலு:—பட்டணத்தில் ஆபத்திற்கு என்ன வேண்டும்? மோட்டாரோ, பஸ்ஸோ மேலே ஏறிவிட்டதோ என்னவோ! மாடு ஒருகால் முட்டிவிட்டதோ; ரயிலில் ஏதேனும் நேர்ந்துவிட்டதோ; குழப்பமாக விருக்கிறது.—என்றான்.

தர்ம:—போடா மடையா! இவைகள் சகஜமாகத் தோன்றக் கூடியதுதான். எனக்கு அப்படித் தோன்றவில்லை. அந்த ராஸ்கல் பயல்தான் ஏதோ செய்திருக்கவேண்டுமென்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. அவன் எதற்கும் அஞ்சாத பாவி.

பாலு:—(இடை மறுத்து) அவனைப் பார்த்ததாகவே தந்தியில் தெரியவில்லையே: அப்படி இருந்தாலும் அவன் என்ன ஆபத்து விளைவித்திருப்பான். அவ்வளவு பகை தங்களுக்கு உதவாதப்பா. சரி:...எது எப்படி இருந்தாலும் நான் உடனே புறப்பட்டுச் செல்கிறேன். தாங்கள் தடை சொல்லக்கூடாது.

சந்தி:—மாமா! நானும் செல்கிறேன். எனக்கும் உத்திரவு

கொடுக்கவேண்டும். நேற்று தயிர் விற்ற காசு இருக்கிறது; கடன் கொஞ்சம் வாங்கிக்கொண்டு போகிறேன்—என்றாள்.

தர்மலிங்கத்திற்கு கோபம் ஒரு புறம்; விசனம் ஒரு புறம் பாதிக்கின்றது. "இப்போது அவர்களுக்குள்ள நிலைமையில் அவர்களைப் போகவேண்டாம் என்றால் கேட்கமாட்டார்கள்" என்று தெரிந்துகொண்டார். ஆதலால் உரத்த குரலால் "எப்படியாவது துலைந்துபோங்கள்; என்னிடம் கூறவேண்டாம். இதோ என் கையில் ஒரு ரூபாய் தானிருக்கிறது." என்று கூறி அதை வீசி எறிந்துவிட்டுப் போய்விட்டார்.

அதற்குமேல் பாலுவும் சந்திராவும் 'யோசித்துப் பயனில்லை; புறப்படவேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டு, அப்போதே பிரயாண சித்தமாகிவிட்டார்கள். இவர்களும் பட்டணத்திற்கு அடிக்கடி சென்றதில்லையாகையால் பட்டினம் செல்லும் மனிதர்களின் துணைகொண்டு வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு ஜெனரல் ஆஸ்பத்திரி இருக்குமிடம் தெரியாதாகையினால் விசாரித்துக்கொண்டே அங்கு சென்றார்கள்.

வீடுகளில் சில நோயாளிகளிருந்தால் வீடு படும் பாடு கூறத்திறமன்று. நோயாளிகளுக்கென்றே கட்டப்பட்டுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியின் நிலைமையை எங்ஙனம் விவரிப்பது? ஆஸ்பத்திரியைக் கண்ணால் பார்த்தறியாத பாலுவும் சந்திராவும் தன் தாயார் எங்கு படுத்திருக்கிறாள் என்று தேடுவார்கள்? மேலும் பாஸ் இல்லாமல் உள்ளே விடமாட்டார்கள் என்பதும் தெரியாது. பிறகு அவர்களுக்கு வந்துள்ள தந்தியைக் காட்டி அதன் பிறகு லக்ஷ்மியம்மாள் படுத்திருக்கும் வார்டிற்குச் சென்றார்கள்.

நாம் இனி லக்ஷ்மியம்மாளைப் பற்றிக் கவனிப்போம். மணியின் வீட்டு வாசலில் தள்ளப்பட்ட லக்ஷ்மியம்மாளின் நிலைமை அப்போது எப்படி இருந்திருக்கும்? முத்தன் வீதியிலேயே நின்றிருந்தவன் இந்த அலங்கோலத்தைக் கண்டவுடன் மதிகலங்கிப் போய் "ஐயோ! அம்மா! அக்ரமமே!" என்று கூச்சலிட வாரம்பித்தான்.

அப்போது லக்ஷ்மியம்மாளுக்கு நல்ல ஞாபகம் உண்டாயிற்று. எனினும் கண்ணைத் திறக்க முடியவில்லை; வலி தாங்கக் கூடவில்லை. அந்த நிலைமையிலும் அந்த அம்மாள் தன் பொறுமையை இழக்காமல் பார யோசனை செய்து முத்தனை அருகிலழைத்து "முத்தா! நீ என் பேச்சைக் கேட்கப்போகிறாயா இல்லையா? நான் உனக்குப் பிரதானமாயிருப்பது உண்மையாயின் நான் சொல்கிறபடி நீ கேட்கவேண்டும். நாம் மணியன் வீட்டிற்கு வந்ததாகவாவது, இங்கு அவனால் அடிபட்டதென்றாவது, நான் அவனுடைய தாயார் என்ற விஷயமாவது நீ ஒருவரிடமும் சத்தியமாகக் கூறலாகாது. அவ்வாறு கூறுவாயாகில் பழி உன்னையேதான் சாரும். ஜட்கா வண்டியைக் கூப்பிட்டு என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போ; அதன் பிறகு பாலுவுக்குத் தந்தி கொடு." என்று முற்றுங் கூறி முடிப்பதற்குள் மீண்டும் மயக்கம் வந்துவிட்டது.

முத்தன் என்ன செய்வான் பாவம்! லக்ஷ்மியம்மாளின் பொறுமையை எண்ணி வியந்தான். மணியன் மீது மூண்ட ஆத்திரத்தையடக்கிக்கொண்டு வீதியிலிருப்போரை விசாரித்துக்கொண்டு ஜெனரல் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டான். டாக்டர்கள் இந்த அம்மாளின் நிலைமையைக் கண்டு மிக்க வியப்புற்று இதென்ன ஒயின் பாட்டல் முகத்தில் வீசப்பட்டிருக்கிறது? யார் இம்மாதிரி செய்தது?" என்றார்கள்.

முத்த:—யாருமில்லீங்க, அம்மா தூங்கச்சிலே புட்டி ஓசக்க இருந்து மூஞ்சி மேலே வியுந்திடிச்சுங்க. ஒடனே இட்டாந்தேங்க— என்றான். டாக்டர்கள் அதை; நம்பவில்லை. எனினும் சிகிச்சை செய்யத் தொடங்கினார்கள். பாட்டல் முகத்தில் விழுந்து உடைந்த வேகத்தில் நெத்தியிலும், கண்ணுக்கு உள்ளேயும் கண்ணாடித் துண்டுகள் நன்றாகப் பொத்திக்கொண்டு விட்டன. மயக்கங் கொடுத்து அந்தத் துண்டுகளை எல்லாம் எடுத்தார்கள். கண்ணுக்கும் முகத்திற்கும் மருந்துகள் போட்டு கட்டிவிட்டார்கள். பாலுவுக்கு முத்தன் தந்தி யடித்துவிட்டு லக்ஷ்மியம்மாளின் கவலைபாகவே உட்கார்ந்திருந்தான். மறு தினம் பாலுவும் சந்திராவும் வந்து சேர்ந்த

தும் முத்தனுக்கு உயிர் வந்தது. "இவர்களிடம் உண்மையைக் கூற லாமா, வேண்டாமா?" என்று தியங்குகிறான்.

பாலு முத்தனைக் கண்டதும் "முத்தா! என்னடா செய்தி! அம்மாவுக்கு என்ன ஆபத்து வந்து விட்டது: அம்மா எங்கே! மணியனைப் பார்த்தீர்களா இல்லையா?" என்று பதறப் பதறக் கேட்டான். முத்தனுக்கு என்ன பதில் கூறுவதென்று திண்டாட்டமாகி விட்டது. எனினும் பாலுவிடத்தில் மட்டும் உண்மையைக் கூறி விடுவதென்று துணிந்து விட்டான். நடந்ததை அப்படியே கூறிய வாறு லக்ஷ்மியம்மாள் படுத்திருக்கு மிடத்திற்கு அவர்களை அழைத் துச் சென்றான்.

லக்ஷ்மியம்மாள் "அப்பா! அம்மா!" என்று வலியின் கொடுமையினால் முனகிக் கொண்டே இருந்தாள். இதைக் கேட்ட தும் பாலுவுக்கும் சந்திராவுக்கும் என்றுமில்லாத ஆத்திரம் பொங்கி விட்டது. "ஆகா! அப்பா சொல்லியதுபோலவே நடந்து விட்டதே! மூளை கெட்ட மடையன்! பணப் பேராசை பேய் கொண்ட தடியன்" என்று பாலு கூறியது லக்ஷ்மியம்மாளின் செவியில் பட்டது. அதே சமயம் "அம்மா! அம்மா!" என்று அவன் அழைத்துக்கொண்டு அருகில் சென்றான்.

லக்ஷ்மியம்மாள் இந்த குரலைக் கேட்டவுடன் "அப்பா! பாலூ! அம்மா சந்திரா! வாருங்கள்; என் செல்வங்களே! வாருங்கள். அழாதீர்கள். ஆத்திரப்படாதீர்கள்; பொறுமையை இழக்காதீர்கள். பொறுமையை சாமான்யமாக நினைக்காதீர்கள். அது ஒரு பெரிய பொக்கிஷம். அதை இப்போதில்லை எனினும் பிறகு ஒரு காலத்தில் அறிவீர்கள். நான் உங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். முதலில் நீங்கள் என் கையிலடித்துச் சத்தியம் செய்து தாருங்கள்.

பாலூ! உன்னையும் அவனையும் சமமாகவே நான் சுமந்து பெற்றெடுத்தேன்; என் விதிப் பயனால் அவன் சத்ருவாக அமைந்து விட்டான்; எனினும் நீ பொறுமைக்குப் பொக்கிஷமாக விரு.

அவன் படாடோபத்திற்கு உரைவிடமாக விருக்கட்டும். உன் அன்னையின்மீது அந்தரங்கமான பிரீதி வைத்திருப்பது உண்மையாயின், "தாய் சொல் துறந்தால் வாசகமில்லை; தாயே தெய்வம்" என்கிற வாக்கியத்தைக் கடைபிடிக்கிறவனாக விருப்பின் இந்த சம்பவத்தை வெளியில் கூற வேண்டாம். அவனைப் பற்றியே நினைக்காதே! மனித யத்தனத்தில் அவனைத் திருத்தவோ, தண்டிக்கவோ முடியாது. கடவுள் கூலி கொடுப்பார்; புத்தி கற்பிப்பார். நீ இதைப் பிறரிடம் கூறக் கூடாது. இது சத்தியம். நம்முடைய போதாக் காலக் கொடுமை என்று தேறு. அவனுடைய அந்தஸ்துக்கும் தற்போதிய கௌரவத்திற்கும் நாம் முட்டுக் கட்டை போடவேண்டாம்; ஜாக்ரதை!" என்று கூறினாள்.

தாயாரிடத்தில் அதிக பாசமும் பக்தியும் கொண்ட பாலு என்ன பதில் பேசுவதென்று தோன்றாது தவித்தான். தான் வாதாடி தம்பியின் தீய குணத்தை வெளியிட்டு விடுவதே சரி என்று தாயாரிடம் கூறிச் சாந்தமுறச் செய்து பார்த்தான். எதுவும் பயனில்லை என்று தெரிந்ததும் தாயின் மனப்படி பிரதிக்ஞை செய்து கொடுத்து விட்டான். மனத்திற்குள்ளே மட்டும் ஆத்திரம் பொங்கிப் பொங்கி எழுந்தது. கண்ணில் கட்டு கட்டி இருப்பதால் லக்ஷ்மிக்கு பாலுவையும் சந்திராவையும் பார்க்க முடியவில்லை. லக்ஷ்மியம்மாள் இருவரையும் தன் கையினால் பிடித்துக்கொண்டு "பாலு! என்றும் அழியாததும், பணமின்றி சம்பாதிக்கக் கூடியதும், உலகமெல்லாம் பிரகாசிக்கக் கூடியதும் எது தெரியுமா! நீங்கள் வகிக்கப் போகும் பொறுமைதான்; அந்தப் பொறுமை உங்களைத் தலை காக்கும்; அழாதீர்கள். சந்திரா! உலகத்தில் பணத்தினால் பெற முடியாத அனேக பொருள்கள் இருப்பதை அந்த மூடப் பையன் பிறகு அறியப் போகிறான்; இப்போதிருக்கும் ஆநந்தமும், பதவியும் என்றும் நிலைத்ததாக எண்ணி இருக்கிறானே இதை ஏன் நாம் தடை செய்ய வேண்டும்? வேண்டாம்! இந்த உதவியை நீங்கள் எனக்குச் செய்தாக வேண்டும்; கண்ணீர் விடாதீர்கள்." என்று தேற்றினாள்.

அதன் பின் ஏதும் பேசவில்லை. பின்னும் சில தினங்களாயின. லக்ஷ்மியம்மாளின் கண்களுக்கு எத்தனை சிகிச்சை செய்தும்

கண்ணாடித் துண்டு பொத்திய வேகத்தில்;கண் பார்வை வரவில்லை. ஒரு கண் அடியோடு கொள்ளை யாகிவிட்டது. மற்ருெரு கண்ணில் கால் பார்வைகூடத் தெரிவது பஞ்சமாகிவிட்டது. நெத்தி எல்லாம் காய வடுக்கள் முத்திரை வைத்தது போலாய்விட்டன. "இனி கண் உபயோக மில்லை. வீட்டுக்குக் கொண்டுபோகலாம்" என்று கூறி விட்டார்கள்.

அந்தோ! தான் பெற்ற பாசத்திஞல் கண்ணுக்குக் கண்ணுன பிள்ளையைப் பார்க்க ஆவலோடு வந்த லக்ஷ்மியம்மாள் தன் கண்ணைக் கொடுக்கும்படி யாகிவிட்டதே; இந்த துக்கத்தை யாரால் தான் சகிக்கக்கூடும்? லக்ஷ்மியம்மாளின் வெளியுலகப் பார்வை போய் விட்டதும் உள்ளறிவும், அபாரமான பொறுமையும் தலை தூக்கி நின்றன. அவள் வாயைத் திறக்காது தன் விதியை எண்ணி எண்ணி ஏங்கிஞள்.

தாயாருக்கு வாக்குறுதி கொடுத்துவிட்ட பாலுவும் சந்திராவும் விசனத்தையும் ஆத்திரத்தையும் அடக்கிக்கொண்டு கண்ணில்லாத தாயாரை அழைத்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தார்கள். தர்மலிங்கம் உள்பட எல்லோருக்கும் மணியன் செய்த அக்ரமத்தை மறைத்து ரயிலிலிருந்து விழுந்து ஆபத்து நேர்ந்ததாயும் அங்கு கண்ணாடிப் பெட்டி உடைந்து பொத்தியதாயும் சரியானபடி சாக்கு சொல்லிவிட்டார்கள். லக்ஷ்மியம்மாளின் மீது தர்மலிங்கத்திற்கு உண்டான கோபம் அளவே இல்லை. அவளையே வெறுத்தார். லக்ஷ்மியம்மாளை கண்ணுக்குக் கண்ணுக சந்திராவும் பாலுவும் உபசரித்துப் பணிவிடைகள் செய்து வந்தார்கள்.

4-வது அதிகாரம்

காசாசைப் பேயின் கொடிய ஆட்சி

தாயாரை தாக்ஷண்யமின்றி அடித்துத் தள்ளிய கொடிய பாதகனாகிய மணி, தன் துஷ்க்ருத்யமான செய்கையில் கொஞ்சமாவது வருத்தமுற்றான் என்று ஒருவரும் கனவு கூடக் காணவேண்டாம்: ஓர் யுத்தவீரன் போர் முனையில் நின்று சத்ருக்களை ஜெயித்து ஜெயபேரிகையுடன் வெற்றிக் கொடி தாங்கி நின்றால் எத்தகைய களிப்புற்று மகிழ்வானோ அதை விடப் பதினாயிரம் பங்கு மணியன் சந்தோஷக் கடலில் ஆழ்ந்தான். அருகி லிருந்தவர்களுக்கு மட்டும் மனம் திடுக்கிட்டது. ஏனெனில் ஓயின் பாட்டல் வீசி எறிந்த வேகத்தில் அது ஏடாகூடமாகப்பட்டு பிராணனுக்கு ஆபத்து நேருமாயின் தங்களையும் அதில் சம்மந்தப் படுத்திவிடப் போகிறார்களே என்று அஞ்சினார்கள். "என்ன சார்! யார் அந்த கிழவி இத்தனை சுவதீனமாக உங்கள் தாயார் என்று கூறிக்கொண்டு வந்தாளே?" என்று ஒருவர் கேட்டார்.

மணி:—அடெ சனியன் பிடித்த கழுதைப் பிணம்! அந்தக் கிழவி பயித்தியம் பிடித்து அலைகிறவள். நேற்று நான் கடற்கரையில் உலாவுகையில் பிச்சை கேட்டாள். கையிலிருந்த காசில் நாலணாவைக் கொடுத்தேன். தனக்குக் குளிர் அதிகம் என்றும் போர்த்துக் கொள்ளத் துணி வேண்டுமென்றும் கேட்டாள். நான் சும்மா விருக்காமல் 'நாளைக்குக் கொண்டு வந்து தருகிறேன்' என்று கூறிவிட்டேன். என் வீட்டை எப்படியோ கண்டு பிடித்து வந்து சேர்ந்து விட்டது சனியன். பிச்சைக்கார நாய்களுக்கு help (உதவி) பண்ணக் கூடாது சார்! ஒரு தரம் கொடுத்தால் அவர்களையே காலைச் சுற்றுகிறதுகள். வீட்டிற்கும் வந்து விடுகிறதுகள்

தரித்திர தேவதைகள். அந்த முண்டை என்னை மகன் என்று கூறி யதும் எனக்கு வந்து விட்டது கோபம். பூஜை வேளையில் கரடி புகுந்ததுபோல வந்துவிட்டது பீடை....சரி!...அந்த பேச்செதற்கு? இனி சங்கீதம் ஆகலாமல்லவா—என்று வார்த்தையை மாற்றி விட்டான்.

உடனே அதிரூபம் என்ற தாசி கச்சேரி செய்யத் தொடங்கினாள். எல்லோரும் ஆநந்தமாகக் கேட்டு விட்டுப் பிறகு தம் தம் வீடு சென்றார்கள். மிஸ் ஜான் மட்டும் வெகு நேரம் அவனோடு உல்லாசமாக வார்த்தை சொல்லிக் கொண்டிருந்து பிறகு வீட்டிற்குச் சென்றாள்.

மணியின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. ஆசைக் கவசத்தில் மறைந்துவிட்ட அவனுக்கு அன்னையின் நினைவு அடியோடு மறந்து விட்டது. விவாக விமரிசைகள் வெகு அட்டகாசமாயும் ஆநந்தமாயும் நடக்கின்றன. குறித்த நாள் வந்தது. மணியனுக்கு வேண்டியவர்களும், மிஸ் ஜானுக்கு வேண்டியவர்களும், அவள் தந்தைக்கு வேண்டியவர்களும் அந்த பங்களா நிறையக் கூடிவிட்டார்கள். இந்திரனின் உலகமோ, கைலாயமோ என்று பிரமிக்கத் தக்க அலங்காரத்துடன் அமைந்திருந்தது. பழய கர்னாடகமான முறை எதுவுமே கைக் கொள்ளவில்லை. ஓமம் வளர்த்திப் புகையில் உட்கார்ந்து கண்ணைக் கசக்குவது அவர்களுக்குப் பெரிய அநாகரிகமாகத் தோன்றியது. ஆதலால் அதுபோன்ற பழக்கங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டு ஒரு பெரிய கனவான் சில முக்கியமான மந்திரங்களின் அர்த்தத்தை மொழி பெயர்த்து எழுதி வைத்துக் கொண்டு படித்துக் காட்டவும், அப்போது மணி பொன் சங்கிலியை ஜானின் கழுத்தில் அணிவிக்கவும், எல்லோரும் மலரை வாரித் தூவி ஜெ கோஷமும், கரகோஷமும் செய்யவும், பிறகு இருவரும் பிரமாண பூர்வமாய் ஒப்பந்தம் பேசிக் கொண்டு மோதிரம் மாற்றிக் கொள்வதும், பிறகு அனேக பிரமுகர்கள் பிரசங்கங்கள் நிகழ்த்துவதும், வந்திருப்பவர்கள் பரிசுகள் கொடுப்பதும், பிறகு முதல் தரமான விருந்து போஜனம் நடப்பதும், மாலை டீ பார்ட்டியும் சங்கீதக் கச்சேரிகளும், அதற்கு வருபவர்களை மணமகனும் மணமகளுமே வரவேற்று ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்வதும்

இரவு டின்னரும், சதிர்க் கச்சேரியும் ஆக பலவித நூதனமான முறையில் விவாகம் வெகு சிறப்பாக நடந்து விட்டது.



விவாகம் நிச்சயமானபோதே கரை புரண்டு களிப்பெய்திய மணியனுக்கு மிஸ் ஜானே, மிஸஸ் மணி ஜானுக அடைந்து விட்ட பிறகு உண்டான சந்தோஷத்தின் எல்லையைக் கூற வேண்டுமா! கரையே காணவில்லை. வெள்ளம் போலப் புரண்டு ஓடுகிறது. ஹா!... இந்த உற்சாகமும், கரை புரண்ட காதலும் ஜானிடத்தில் மணிய னுக்கு இதய பூர்வமாக ஒரு கடுகளவேனு மிருப்பின் எத்தனை ஒழுங்காக விருக்கும்? இல்லை! இல்லை! காதலென்பதே அவன் இருத யத்தில் இல்லை. ஆனுல் பணத்தினிடம் கோண்டுள்ள காதலுக்கு ஜானையோர் கருவியாக எண்ணி அடைந்து விட்டான். அக் கரு வியை எவ்வகையில் உபயோகித்தால் திரண்ட செல்வத்தின் திரைக் கடலில் துலையலாம் என்று யோசிப்பதிலேயே தன் கவனத்தைச் செலுத்தினுன்.

பேதைப் பெண்ணுகிய ஜான் மணியனின் உண்மையை ஒரு சிறிதும் அறியவில்லை. தான் தன்னிதய பூர்வமாய் முழு மனத்துடன் காதலிப்பது போலவே அவனும் தன்னைக் காதலித்திருப்பதாகவே பரிபூர்ணமாக நம்பிவிட்டாள். தன்னுயிர் நிலை யவனே என்றும் தீர்மானித்தாள். விவாகமாகிய பிறகு அளவற்ற பூரிப்பை அடைந்து தன்னைப் போன்ற பாக்யசாலிகள் உலகத்தில் உண்டா என்று களித்தான் தான் எண்ணுவது பிசகு. இது ஒரு தலைக் காதல் என்று அவளறிந்திருப்பின் முன் கூறியபடி நினைப்பாளா! பாவம்!

விவாகமாகிய விஷயங்கள் ஒரு வாரம் வரையில் பல பத்திரி கைகளில் புகைப்படத்துடன் உலாவின. ஜான் விவாகமாகிய பிறகு தான் எப்படி எல்லாம் இருக்கவேண்டும் என்று முதலிலேயே தீர்மா னித்து வைத்திருந்தாளோ, அம்மாதிரியாக நடக்க முற்றிலும் இச்சை கொண்டாள்: ஆனுல் காதலற்ற கட்டையாகிய மணிய னின் செய்கையும் நடக்கையும் இதற்கு நேர்மாருக இருந்தது கண்டு ஜான் சில வாரங்களுக் குள்ளேயே சிறிது மனவருத்த முற்ருள்.

மணியன் அவைகளை எல்லாம் சற்றும் கவனிப்பதே இல்லை. எந்த வியாபாரத்தை எவ்விதம் நடத்தலாம். எவ்விதம் பணம் சேர்க்

கலாம் என்ற நோக்கத்துடன் அதே வேலையில் ஈடுபட்டு ஜெயலக்ஷ்மியின் கிருபையால் ஆயிரமாயிரமாகப் பங்குப் பத்திரங்களைச் சேர்த்து விட்டான். இரும்புப் பெட்டி முற்றும் ஒரே பத்திரங்களும், கவர்ன்மெண்டு நோட்டுக்களும், நிறைந்து விட்டன. மணியனுக்கு அதிர்ஷ்டம் ஏற ஏற அவன் மாமனுருக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அதிர்ஷ்டம் குறைய வாரம்பித்தது.

ஜானுக்கு முன்பு இருந்ததை விட சந்தோஷங் குறைய வாரம்பித்தது. காரணம், மணியனின் காதலற்ற இருதயத்தை ஒருவாறு அறிந்துகொண்டாள். சகல விதத்திலும் மேனுட்டு நாகரிகத்தில் மூழ்கிக் கிடப்பினும் ஜான் விஷயத்தில் கடினமாயும், பூர்வீக இந்துக்களின் சம்பிரதாயத்தைப் போலும் அவளை மணியன் நடத்துவது அவளுக்குச் சொல்லத் திறமற்ற விசனத்தை யுண்டாக்கியது. இதைத் தன் தந்தையிடம் சொல்லத் தயங்கினுள்; விசனித்தாள்; வெட்கினுள். மணியனிடத்தில் தானுக வலியச் சென்று பேசுவாள். அப்போதும் அவளிடம் அன்பாகப் பேசவோ, சந்தோஷிக்கவோ செய்யாமல் தனக்குப் பணம் வரும் வழி ஏதேனும் உண்டா என்று யோசித்து "உன் தந்தையிடமிருந்து இதை வாங்கிக் கொடு. அதை வாங்கிக் கொடு" என்று இவ்விஷயமே பேசுவான். இது ஜானுக்கு எவ்விதம் சந்தோஷத்தை யளிக்கும். தான் கட்டிய ஆகாயக் கோட்டை இடிந்துவிட்டதே என்று விசனிப்பாள். இந்நிலைமையில் மணியன் ஏதேதோ காரணங்களை எல்லாங்கொண்டு ஜானைத் திட்டவும், அடிக்கவும், சதா கடு கடு என்று பேசவும் ஆரம்பித்தான்.

ஜான் முற்றிலும் மேனுட்டு நாகரிகத்தைச் சேர்ந்தவளாகையினுல் இவனுடைய செய்கையை முற்றிலும் வெறுத்தாள். இவனை விட்டு விலகி விடுவதென்றும் சில சமயம் எண்ணினுள். எனினும் தன்னுடைய பிதாவுக்கு வியாபாரத்தில் திடீரென்று பெருத்த நஷ்டம் வந்துவிட்டதால் அவருக்கு இப்போது அபாரமான மனக் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. கடனும் அதிகமாய்விட்டது. இந்நிலைமையில் தானும் இவ்விஷயத்தைக் கூறி அவர் மனத்தை வருத்தக் கூடாதென்று சற்று தியங்கினுள். மேலும் தன் தந்தையின்

கடனுக்கு அளப்பரிய செல்வவந்தனுகிய தன் கணவன் ஏதேனும் உதவி செய்யலாம் என்கிற ஓர் நம்பிக்கையும் இருந்தது. இவை களை எல்லாம் யோசித்துத் தன் துக்கத்தைச் சகித்து வந்தாள்.

சில வருடங்கள் ஓடி மறைந்தன. மணியனுக்குப் பணம் குவிந்துவிட்டது. அப்போது தான் அவன் உண்மையான சந்தோஷத்தை படைந்தான்; எனினும் அப்போதும் ஓர் சிறிய கவலை அவன் மனத்தில் உலாவத் தொடக்கியது. அது யாதெனில் தான் கோரியபடி இத்தனை செல்வங்களையும் பெற்ருயிற்று. இனிமேல் வேண்டியது யாது? இந்த செல்வத்தினை யாள்வதற்கு ஓர் மகன் வேண்டும் என்பதே யாகும். அவன் பணப்பேய் பிடித்தவனுகவிருந்த தால், அவன் சினேகிதர்கள் வீடுகளில் இத்தனை நாட்களாகக் குழந்தைகள் ஆடுவதும் ஓடுவதுமான ஆநந்தம் அவன் கண்ணில் தெரியவில்லை. அவனுக்குப் பணம் நிறைந்த பிறகுதான் "இம்மாதிரி யான குழந்தைகள் நம்மிடமும் இல்லையே! இதற்கென்ன செய் வது? சீச்சீ! ஜானை நாம் மணந்துகொண்டும் அவளையோர் அன்னிய மாது போலவே விலக்கி இருந்து இது பரியந்தம் நடந்துவிட்டோம். அவள் மூலமாக நாம் எதிர் பார்த்த பணத்தைச் சேர்த்துக்கொள் வதிலேயே கண்ணுங் கருத்துமாக விருந்தோமே யன்றி அவளிடம் இன்னும் ஒரு சிறிதும் காதலுண்டாகவில்லை. நமக்குள்ள செல் வத்தை—திரண்ட ஐச்வர்யத்தை—ஆளுதற்குக் கட்டாயம் ஒரு குழந்தை பிறக்கவேண்டும்." என்ற எண்ணம் அவன் மனத்தில் வெகு தீவிரமாக உதித்தது.

எப்போதும் எதிர் பாராமலேயே நன்மையோ தீமையோ உண் டாகுமாயின் அதனுல் ஏற்படும் ஆனந்தமோ, மன ஏமாற்றமோ, இரு தய உடைப்போ அவ்வளவு அதிகமில்லை. எதிர் பார்த்து ஒரு காரியத் தைத் தான் சந்தோஷமாக முடிக்கலாம். அதனுல் அதிக பலனடை யலாம் என்று நினைத்திருந்து அக்காரியம் கைகூடியும் தன் மனப்படி பலன் கிடைக்காவிடின் அதுவே ஆளைக் கொல்லும் சத்ருவாக அமைந்துவிடும். அதேபோல ஜானின் கதி யாகிவிட்டதால் அவ ளுடைய நாகரிகமும் புதிய மோகமும் டாம்பீகமும் எல்லாம் மறைந்துவிட்டன. அவள் சாதாரணமான ஓர் கர்னுடகப் பெண்

தயவு செய்து

புது வருஷ

ச ந் தா வை

முன் பணமாக அனுப்புங்கள்.

வி. பி. யில் அனுப்பச்

சொல்வதால் உங்களுக்கு

அனாவசியச் செலவும்,

கால தாமதமுமே.

நமக்குத் தெரிந்த வரையில்

தமிழ்ப் பத்திரிகையுலகில் இது வரை நடை பெறாத சம்பவம்

இனாம் **முற்றிலும்** **இனாம்**

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்படும் நாவல்கள்

நமது

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இதர சஞ்சிகைகளைப் போல நாமும் ஜீவிய சந்தா ஏற்படுத்த வேண்டுமென்று அநேகர் கோருவதால், ரூ. 25/- முன்பணமனுப்புகிறவர்களை நமது ஜீவிய சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்வதுடன், இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களையும் இனாமாக அனுப்புவோம்.

பதினேன்ருவது ஆண்டு

"ஜகன்மோகினி"

இம் மாதாந்த சஞ்சிகை ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய அற்புதமான நாவல்களையும், அநுபவ நீதிசாரங்களையும் தன்னகத்தே தாங்கிக் கொண்டுள்ளது. இதன் பதினேன்ருவது ஆண்டு 1933 வரு டிசம்பர் மீ முதல் ஆரம்பம். இதில் வெளியாகும் நாவல்கள் ஒரு வருடத்தில் டிம்மி சைஸில் ($8\frac{1}{2}'' \times 5\frac{1}{2}''$) சுமார் 600 பக்கங்கள் ஆகின்றன. அந்த வருடம் முடிந்ததும், தனி நாவல்கள் (தபாற் செலவு தவிர) ரூ. 3-க்கு விற்கப்படும்; ஆகையால் "ஜகன்மோகினி" க்குச் சந்தாதாரராய்ச் சேர்ந்து விடுவதால் குறைந்த சந்தாவில் நிறைந்த பக்கங்களையுடைய நாவல்களை அடைவதுடன், மேற்படி நூலாசிரியை எழுதிய இதர நாவல்களையும் இப்பக்கத்தில் கண்டுள்ள குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்பதைக் கவனிக்கவும்.

மாதிரிப் பிரதி இனும்!

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

					"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை		
வைதேகி (2 பாகங்கள்)	2	8	0	...	2	0	0
பத்மசுந்தரன்	2	8	0	...	2	0	0
ராதாமணி (2 பாகங்கள்)	2	8	0	...	2	0	0
சாருலோசனு (2 பாகங்கள்)	2	8	0	...	2	0	0
காதலின் கனி	2	8	0	...	2	0	0
நவநீதகிருஷ்ணன்	2	0	0	...	1	12	0
ருக்மிணீகாந்தன்	2	0	0	...	1	12	0
சியாமளநாதன்	2	0	0	...	1	12	0
சண்பகவிஜயம்	1	12	0	...	1	8	0
கௌரீமுகுந்தன்	1	12	0	...	1	8	0
ஸாரமதி	1	12	0	...	1	8	0
சோதனையின் கொடுமை	1	8	0	...	1	4	0
பரிமளகேசவன்	1	4	0	...	1	0	0
உத்தமசீலன்	1	4	0	...	1	0	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	...	0	14	0
கதம்பமாலை	1	0	0	...	0	14	0
கோபாலரத்னம்	0	14	0	...	0	12	0
மளினசேகரன்	0	8	0	...	0	6	0
வீரவஸந்தா	0	8	0	...	0	6	0
மூன்று வைரங்கள்	0	8	0	...	0	6	0

ரூ. 21- முன்பண மனுப்புவோருக்கு மேற்கண்ட 20 நாவல்களையும் தபாற்செலவின்றி அனுப்புவோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், 26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

210048

னாகிவிட்டாள். மனோ வேதனையினால் மனங் கலங்கிப் புண்பட்டு சிக்காளிபோல உருவத்திலும், நிலைமையிலும் ஆய்விட்டாள். இந்நிலைமையில் சில மாதங்களில் ஓர் குழந்தைக்குத் தாயாகும் நலை விதியை அடைந்தாள்.

இக் கருநோய் கொண்ட நாள் முதலாக ஜானின் பலஹீனமும் துர்ப்பலமும் பின்னும் அதிகரித்து பாயும் படுக்கையுமாக ஆய்விட்டாள். மணியனுக்கு மட்டும் இன்னும் சில மாதத்தில் தனக்குப் புத்திரன் பிறக்கப்போகிறான் என்கிற பெரு மகிழ்ச்சி யுண்டாகியது. அந்த மகிழ்ச்சியை யளிக்குங் கருவியாகிய ஜானிடத்தில் அப்போதும் மனப்பூர்வமான காதல் ஒரு சிறிதுமில்லை. பணத்தைத் திரட்டுவதற்கு அவளையோர் கருவியாக உபயோகித்தது போல புத்திரனை அடையவும் ஓர் கருவியாகவே — இயந்திரமாகவே — பசையற்ற மனத்தில் நினைத்திருந்தான்.

இதற்கிடையில் ஜானின் தகப்பனாருக்கு நஷ்டம் அதிகரித்து விட்டதால் அவருக்கு வாரண்டு வந்து விடும் கதி உண்டாகிவிட்டது. அவர் தன் கம்பெனி வியாபாரம் முழுவதையும் தன் மருமகனிடமே அடகு வைத்து அவனிடம் பணத்தை வாங்கி கடனுக்கு ஒப்புவித்தார். அந்த கடனை திருப்பிக் கொடுக்கும் வழி ஏற்படாது மேலும் மேலும் நஷ்டமே உண்டாகிவிட்டது.

இதையறிந்த மணி இதற்குச் சரியான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்; அவருடைய தொழில் தான் பணங் கொடுத்திருப்பதற்கு மேல் இரட்டிப்பு தொகையைப் பெறுமானமுடைய தாகையால் கவலையற்றிருந்தான். ஜானுக்குப் பிரஸவ காலம் நெருங்கியது. அவளுடைய மனோ வேதனையில் இந்த உபத்திரவமும் ஒன்று கூடியதால் வெகு ஆபத்தாக முடிந்துவிட்டது.

மணி எதிர் பார்த்ததற்கு ஏமாற்றமாக ஓர் பெண் குழந்தையை ஜான் அளித்தாள். 'மணியன் குழந்தை ஆணா! பெண்ணா' என்று அறியாமலேயே தனக்கு ஆண்தான் பிறக்கும் என்ற மூட நம்பிக்கையுடன் அதற்கு வேண்டிய சந்தோஷச் சின்னங்களுடன்

எதிர் பார்த்திருந்தாள். டாக்டர் 'பெண் குழந்தை பிறந்தது' என்று கூறியதும் அவனுடைய கோட்டை முற்றும் இடிந்துவிட்டது. ஜானின் உயிர் நிற்குமா, போகுமா என்ற பேராபத்திலிருப்பதையும் அவன் கவனியாது கோபமும் ஆத்திரமும் கொண்டு விட்டான். ஜானைப்பற்றிச் சற்றும் கவனிக்கவே இல்லை. இந்த விசனம் ஜானுக்கு அதிகரித்தது.

சில வாரங்கள் சென்ற பிறகே ஜான் பிழைப்பாள் என்ற நிலைக்கு வந்தாள். டாக்டர்கள் மணியினிடத்திலேயே "ஜான் உயிருடன் இருக்கவேண்டுமாயின் அவளையோர் இளங்குழந்தையை வளர்ப்பதுபோல வளர்க்கவேண்டும்; ஏனெனில்; அவளுக்கு இருதயம் சரியாக இல்லை. இனிமேல் இத்தகைய கரு நோய்கள் உண்டாகுமாயின் அவள் இறப்பது நிச்சயம்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள்.

மணியனின் செல்வச் செறுக்கில் கடவுள் என்பதை அறவே மறந்துவிட்ட நாஸ்திகனுக விளங்குபவனுக்கு ஈசன் அருள் இது என்பது எவ்விதம் தோன்றும். ஜான் விஷயத்தில் அப்போதும் இரக்கமோ காதலோ கொள்ளவில்லை; ஆனால் வைத்தியம் செய்வதை நிறுத்தவில்லை. சில மாதங்களில் ஜான் ஒருவாறு குணமடைந்தாள். ஜானுக்குப் பிறந்த பெண் குழந்தையை மணியன் கண்ணாலும் பார்க்கவில்லை; எனினும் ஜான் மட்டும் அதை அருமையாக வளர்த்து வந்தாள். அவளுக்கு ஆசைமட்டு மிருக்கிறதே யன்றி அதற்கு வேண்டிய காரியங்கள் செய்யச் சக்தி இல்லை. "இந்த பெட்டை கட்டைக்கு ஆள் எதற்கு?" என்று மணி கண்டிதமாக இருந்ததால் "அத்தகைய சண்டாளனுகிய பிதாவின் கையில் இந்த ஜீவனை வைப்பது தவறு" என்று எண்ணிக் கடவுள் அதை சில மாதத்திற்குள்ளேயே தன்னிடம் சேர்த்துக்கொண்டார்.

அந்தோ! ஜானுக்கன்றோ அந்த விசனம் தெரியும். அந்த துக்கத்தில் பின்னும் சோர்வுற்றாள். ஜானின் பிதாவுக்கு நஷ்டம் அதிகரித்து, மதிப்பு குன்றியதால், அவர் வெறும் உதவாக் கட்டை போலாகிவிட்டார். தான் தன் தாய்நாட்டையும் அதன் நடையுடை

பாவனைகளையும் அடியோடு வெறுத்துக் கடவுளையே மறந்து தன் பெயரையும் மாற்றிக்கொண்டு தான் ஆடிய ஆட்டத்தின்கோலத்தை யெல்லாம் இப்போது எண்ணி வருந்தலானுர்.

மணியனுக்கு இனி தான் பணங் கொடுக்க முடியாதென்பதை யறிந்து தன் மகளிடம் வருத்த முற்ருர்: "அம்மா! நீ எப்படியாவது அவரிடம் கூறி நமக்கு ஏதேனும் ஆதாரம் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்'' என்று கெஞ்சினுர். தந்தையின் பரிதாபத்தைக் கண்டு சகிக்காத ஜான் தன் புருஷனிடத்தில் பல விதம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

காசாசைப்பேய் பிடித்த மணியன இதைக் கேட்பவன்? நீ கூறுவதெல்லாம் மூட்டை கட்டித் தூரே வைத்துவிடு. என்னிடம் அடகுக்கு பெற்ற பணத்தைத் திருப்பிக் கொடுத்து சொத்தை எடுத் துக் கொள்ளட்டும். இல்லையேல் எல்லாம் முழுகிவிட்டதாகவே நான் முடித்துவிடுவேன். வியாபார விஷயம் வியாபார தோரணையி லேயே இருக்கட்டும். அதை மாற்ற முடியாது. இனி அவர் வீடு வாசல் சகலமும் என்னுடையதாகிவிட்டன. இனி உன் பிதாவுக்கு நான் தண்ட சோறு போடுவதற்கு முடியாது; எனினும் என் வீட் டுக் குமாஸ்தாவாகவிருந்து சாப்பிடட்டும். இந்த உதவிக்கு மேல் செய்ய முடியாது.'' என்று கண்டிப்பாய்க் கூறிய வார்த்தைகள் ஓர் பெரிய மலை புரண்டு ஜானின் தலைமீது விழுந்தது போன்றிருந்தன.

என்ன செய்வாள் பேதைப் பெண்! "சீச்சீ! இதென்ன வாழ்க்கை! இதென்ன உலகம்!'' என்ற ஓர் வெறுப்பும் அடங்காத விசனமும் தோன்றியவளாய்த் திரும்பிவிட்டாள். சிற்றரசனுக்கு ஒப்பாகவிருந்த வேலுசாமி (வேல்ஸன்) இப்போது அடிமையாகத் தன் மருமகன் காலிலேயே விழுந்து கிடக்குங் காலம் வந்துவிட்ட தெனில் இந்த துக்கம் ஆறுமா, தீருமா! அதுவே ஓர் ஷாக்கு அடித்ததுபோல் பலமான நோயில் விழுந்துவிட்டான்.

ஜானுக்கும் ஏற்கெனவே இருந்த மன வேதனையுடன் மீண்டும் அவளை முன்போல கரு நோய் வந்து பிடிக்க வாரம்பித்தது. அவ ளுடைய பலஹீனத்தில் இந்நோய் உண்டாகியதும் அவள் தனக்கு

இது முடிவு காலத்திற்குத்தான் மீண்டும் வந்துவிட்டதென்று தீர்மானித்துக் கொண்டாள். முன்பு கூறிய டாக்டர்கள் மிக்க விச னத்தை யடைந்து மணியின் கல் நெஞ்சைப் பற்றி வெறுத்தார்கள்.

இந்த தடவை ஆண் குழந்தை பிறக்குமாயின் டாக்டருக்குப் பத்தாயிரம் ரூபாய் இனும் கொடுப்பதென்று மணி தீர்மானித்துக் கொண்டான். ஜான் பழையபடி பாயும் படுக்கையுமாகி விட்டாள். தன்னுடைய பிரஸவகாலத்தை எதிர் பார்த்திருந்தாள். ஏன்? அதோடு தன் முடிவு நிச்சய மென்பது அவளுக்குத் தெரியும். ஆதலால் எமனை எதிர் நோக்கி நிற்கிறாள். மணியன் தனக்கு ஓர் ஆண் மகவை எதிர் நோக்கி நிற்கிறான். இருவரில் யாருக்கு எது கிடைக்கும்?

சில மாதங்களாகி விட்டன. ஜானின் பிரஸவ காலம் சமீபித்தது. 'எப்போது ஆண் குழந்தை பிறந்ததென்று டாக்டர் கூறுவார்?' என்று மணி அவ்வறையின் கதவினண்டையிலேயே நின்று எதிர் பார்த்திருந்தான். சில மணி நேரத்திற் கெல்லாம் டாக்டர் கதவைத் திறந்துவிட்டு மணியனை "நீங்கள் உள்ளே வரலாம். காரியம் ஆய் விட்டது; ஜான் உங்களைக் கூப்பிடுகிறாள்" என்றாள்.

இது கேட்டதும் மணி தட தடவென்று உள்ளே சென்றான்; கட்டிலின் மேல் ஜான் படுத்திருக்கிறாள். அவளுடைய ஸ்வாஸம் பெரியதாக வருகிறது; அவள் இரு விழிகளும் மணியனையே நோக்கின. கட்டிலின் கீழே வயிற்றிலேயே இருந்து வெளியான ஆண் பிரஜையின் சவம் தங்க விக்ரகம் போல கடத்தப் பட்டிருந்தது. இந்த கோலத்தைக் கண்டதுமே மணியனுக்கு அவன் ஜென்மத்திலேயே என்றுங் கண்டிராத ஓர் ஷாக்கு அடித்தது. உயிரற்ற சிசுவினுடைய சவத்தின் அருகிலே சென்றான். பல பல வென்று கண்ணீரை முத்துப்போல அக் குழந்தையின் மீது உதிர்த்தான். அதைத் தடவிப் பார்த்தான்.

இதற்குள் ஜான் தன் கையை ஆட்டி மணியனைக் கூப்பிட்டாள்; கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கட்டிலினருகில் வந்து மண்டியிட்டு ஜானின் வாய்க்கு நேரே காதை வைத்துக்கொண்டு உட்கார்ந்தான். ஜான் மணியனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு


B.N.Rao.

"நாதா! நாதா! நான்......போ......கி......றே.......ன்...... ....எ........ன்.....கா.....லம்.......மு......டி.......ந்......து.....வி ......ட்......ட......து......எ.......ன்......னை......ப......ண....... ம்......சே......ர்......க்......கும்......கரு.......வி.......யா......க... ....தா........ங்......க......ள்......ம......ண...ந்........த......தை... ...மு......த......லி......ல்......அ......றி......யா.......து.......ஏ ....மா......ந்......தோ......ம்.......எ......ங்......கள்......கு...... ...டும்......ப......மே......அ......தோ......கதி......யா......கி.... ...வி......ட்......ட......து......த.......ங்.......களு.......க்.......கு ....பண......ம்......ஒ......ன்....... று.......தா.......ன்......பி.... ...ர......தா.... ...ன.......மா.......க......இ.......ரு......ந்.......த... ....து......க......லி.......யு......க......கு...... பே......ர......னா..... ...கி......வி......ட்......டீ......ர்......கள்........இ......ரு.......ப்.... ...பி.......னு......ம்;......நீங்......க......ள்......நினை ......க்......,கி ....ற.......ப..டி ப......ண......த்......தி......னா.......ல்,......சக ....ல......மு......ம்......அ.......டை.......ந்.......து......வி...... ....ட......மு.......டி......யா......தெ......ன்......ப......து......ம் ......பண......த்......தி......னா.......ல்......நீ......ங்......க......ள் ....பெ......றமு......டி......யா......த......அ...ரி...ய......பொ ......ரு.......ள்.....க...ள்...சில......இ......ரு......க்...கி......ன்ற. ....ன......வெ......ன்......ப......து......ம்......இ...... னி...... யா......வது......அ......றிந்......து......கொ......ள்......ளு...... ங்......க......ள்......நா......ன்......போ......கி......றே......ன்... ...ப......ண...ம்......ஐ......ம்......பு......ல......ன்...க...ளு...க் கு......ம்......அ......ளி......க்......க......க்......கூ......டிய...... அ......ழி......வி......லா......த......ஆ......ன......ந்......த......த் ......தை......க்......கொ......டு......க்......க......ச......க்......தி ....ய......ற்.........றது.......எ......ன்......ப......து.........நி ......னை......வி......ரு......க்......க......ட்......டும்......ஹா...... ஹா!......பணத்தினால் சில அரிய பொருள்களை நீங்கள் சம்பாதிக்க முடியாது......என்று முதலில் திணறித் திணறியும், பிறகு ஒரே மூச்சாயும், பட பட வென்றும் கூறினாள். மணியன் பிடியிலிருந்து

தன் கையைத் தானே எடுத்துக் குவித்து, சிர மேல் தூக்கினாள். "நாராயணா! நாராயணா!" என்றாள்.

இரு விழிகளும் நீர்த்தாரையைக் கக்கின, அடுத்த நிமிடம் தன் விரையழிந்தாள் பின்னும் சில வினாடிக்குள் அவளது ஆவி நிச்சல மான உலகிற்கு இக் கூடை (சரீரத்தை) உதறி விட்டுச் சென்று மறைந்தது.

ஆகா! டாக்டர்களுக்கு அங்கு நிற்கவும் பிடிக்கவில்லை. "நாங்கள் சொல்லிய படி ஆய் விட்டது பார்த்தாயா!. இதுதான் சாச்வதமே யன்றி நீ அல்லாடும் பணம்—நம்பிய பணம்—சாச் வதமில்லை. அந்த பணத்தினால் இக் குழந்தையின் உயிரையோ, ஜானின் உயிரையோ மீட்ட உன்னாலாகுமா? இது தான் அம்மாது, இறக்குந் தறுவாயில் கூறிய தத்துவமாகும்." என்று உதாசின மாகக் கூறி விட்டுப் போய் விட்டார்கள்.

அந்தோ! சவத்தின் அருகில் அமர்ந்த மணியன் மின்சார சக்தி யினால் தாக்கப் பெற்றவன் போல அப்படியே நிலைகலங்கிவிட்டான். இந்த மாதிரி பணத்தினால் நீ பெற முடியாத பொருள்கள் சில இருக் கின்றன வென்று கூறியவர்களில் ஜான் மூன்றாவது. அன்றுதான் இதற்கு முன் தன் தாயார் இரு முறைகளில் கூறியதும், சகுந்தலா கூறியதும் இவன் மனத்தில் நினைவிற்கு வந்தன. அந்த நிமிடம் அவன் ஆயுளில் என்றும் கண்டறியாத ஓர் நூதனமான உணர்ச்சி அவனைத் தாக்கியது. சிசுவின் மீதும் ஜானின் மீதும் விழுந்து புலப்பினான். அப்போதும் பணத்தின்மீது கொண்ட மோகத்தை மட்டும் விடவில்லை. பிறகு ஜானின் சவத்தையும், சிசுவின் சவத்தை யும் தட புடலான அமர்க்களத்துடன் அடக்கஞ் செய்து விட்டு வீட்டிற்கு வந்தான்.

வீட்டில் இவனும் இவன் பணமும் தவிர வேறு உரிய பொருள்—உரிய உயிர்—உண்டா? கிடையாது. மணியனை யறியா மல் அவன் மனத்தில் ஏதோ செய்கிறது. "சற்று முன்பு வரையில்

எனக்கு ஆண் குழந்தை பிறக்கப் போகிறது என்று மகிழ்ச்சி கொண்டிருந்த கோட்டை ஒரு நொடியில் இடிந்துபோக தற்போது நான் ஒண்டிக் கட்டையாக நின்றேன் பார்த்தாயா?'' என்ற துக்கமும், ஏக்கமும் மனத்தில் அபாரமாக வேலை செய்கின்றன. வீடு முற்றும் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறான்.

ஜான் கடைசித் தரமாகச் சொல்லிய வார்த்தைகளும், அவள் பார்த்த பார்வையும் அவன் மனத்தை விட்டுப் போகவே இல்லை. "பணத்தினால் நீ பெற முடியாதது இன்னும் சில பொருள்கள் உள் ளன'' என்று ஜானின் உயிர் போகும் தறுவாயிலும் கூறியதன் காரண மென்ன? இதே பதங்களை சகுந்தலா கூறினாள். கிழப்பிணமும் கூறி யது......சேச்சே! இந்த பதங்கள் அர்த்தமற்ற சொற்கள். பணத்தி னால் ஆகாத காரியம் உலகிலிருப்பின் அது கடவுளாலும் ஆகாத காரி யமாகத்தான் இருக்கவேண்டும்.'' என்ற மமதை எண்ணம் பின் னோடு வந்தலைகின்றது.

துக்கம் விசாரிக்க அனேகர் வந்துகொண்டே இருப்பதால் இவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஜானின் மரணத்தை யறிந் ததும் அவளுடைய பிதா பாயும் நோயுமாக இருப்பவர் அப்படியே மூர்ச்சித்தார். எழுந்து வரவோ, பிணத்தைக் கண்ணால் பார்க்கவோ முடியவில்லை; எனினும் வேலைக்காரரின் உதவியால் வந்து பெண் ணின் மீது விழுந்து அடித்துக்கொண்டார். "ஐயோ! என் பாழும் நாகரிகத்தின் விபரீதத்தினால் என் குடும்பத்தையே அடியோடு மூழ் கச் செய்துவிட்டேனே. என் கண்மணீ! ஜானகி! உன்னைக் கொண்டு செல்லும் எமனுக்கு என்னையும் சிபார்சு செய்யலாகாதா? உன்னைப் பெற்ற பிதாவுக்கு இந்த உதவி செய்யலாகாதா!

ஐயோ! நான் முற்றிலும் மேனாட்டாரைப் போன்று மாறி விட்டதனாலன்றோ ஒரு மக்கள் மனிதர்களும் என்னை சட்டை செய் யாது ஜாதியை விட்டே தள்ளி விட்டார்கள்! என்னுடைய அப் போதிய மூடத் தன்மையில் நான் அளப்பரிய அகம்பாவத்துடன் சகலத்தையும் லக்ஷியம் செய்யாது பெயர் முதல் மாற்றிக் கொண் டேனே! அந்த சாக்கிலாவது கடவுளைத் தியானிக்கும் நோக்கம்

நம் பெரியோர் கொண்டிருப்பதை அறவே மறந்து, அர்த்தமற்ற வேல் ஸன் என்றும், ஜான் என்றும் மாற்றிப் பாழாகிவிட்டேனே! கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்து என்ன உபயோகம்? என் கண்மணீ! ஜானகி! ஜானகி! அனாதையான உன் தந்தையை இங் குப் பணப்பேயின் வசம் தனித்து விட்டு விட்டுச் சென்றாயே? ஐயோ! இனி நான் என்ன செய்வேன்? ஹா! கண்ணே! ஜானகி! ஜானகி! என் செல்வமே! என் ரத்தினமே! கண்ணிருந்தும் குருடனு கக் காலத்தைக் கடத்திவிட்டு இப்போது உண்மையிலேயே குருட ளுகி விட்டேனே! ஹா! ஈசா! கண்மணியை என் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டாயே! இது தருமா! ஐயோ! இனி என்ன செய் வேன்?'' என்று கதறினன்; தலையில் மோதிக் கொண்டான்.

உயிர் இருக்கும் வரையிலேயே ஒரு மனிதர் பொறுமையாக உட்கார்ந்து பேசுவது கஷ்டம். உயிரற்ற சவத்தினிடம் பேசிப் பயன்தான் உண்டா! அன்றிப் பேசும் நேரந்தான் கிடைக்குமா? உயிர் நீங்கிய தக்ஷணமே ஆச்சா! போச்சா! என்று தூக்கிவிடுவதி லன்றோ நோக்கம்! அப்படியே ஜானின் கதியும் ஆயிற்று. ஜானின் பிதாவை தலை நிமிர்ந்தும் பார்க்காத மணியன் அவர் துயரத்தைப் பற்றி ஏன் நினைக்கப்போகிறன்? தான் ஜானிடத்தில் காதலற்ற— அன்பற்ற—மிருகத்தன்மையில் நடந்துகொண்டிருப்பினும், ஊரார் மெச்சும் பொருட்டு அவளுடைய சவத்தை உயர்தரமான கோலங்க ளோடு சந்தனக் கட்டையைப் போட்டுத் தனி இடத்தில் தகனம் செய்தான்.

வீட்டில் துடி துடிக்கும் வேலுசாமியைக் கவனிக்கவே இல்லை. வருவோர் போவோரிடத்தில் பேசிக் கொண்டிருந்தான்; பிறகு சாமியின் நினைவு வந்தது. ஏழைகளின் முகத்தைப் பார்க்கவும் வெறுப்பு கொள்ளும் மணியன் வேலுசாமியின் எதிரில் சென்று சற்று முடுக்காகவே நோக்கி, ''ஐயா! இவ்விடமும், மற்ற சகலமும் என்னுடையதென்பது முன்பே தெரிந்த விஷயம். எனினும் உமது மகளுக்காக வேண்டி நான் பேசாம லிருந்தேன்; அந்தநாடகம் முடிந்து, திரை விழுந்து விட்டது. இனி நாடக மேடையில் வேலை யில்லை யல்லவா! ஆதலால் இந் நிமிடமே தாங்கள் இவ்விடத்தை விட்டுச் செல்லலாம்'' என்று கல்லினுங் கொடிய சித்தத்துடன் கூறி னன்.

இதைக் கேட்ட வேலுசாமிக்கு இது வியப்பாகத் தோன்ற வில்லை. ஏனெனில் தன் மகள் இருக்கும்போதே தன் விஷயத்தில் அவன் காட்டிய வஞ்சகத்தை யனுபவித்திருப்பதனல்தான். எனி னும் மனம் பொறுக்காமல் பேசத் தொடங்கி, ''அடேய்! மணி!

நாடகம் முடிந்துவிட்டது உண்மைதான். ஆனல் நாடகப் பாத்திரத்தின் நடிப்பு இன்னும் ஒன்று மிஞ்சியுள்ளதே! அது எது தெரியுமா! நீயும் உன் செய்கையும்தான். என்னை வஞ்சித்து என் குழந்தையை மோசமாக மயக்கிக் காதல் உள்ளவன்போல நடித்து என் சொத்தையும், என் கண்ணன ஜானகியையும்—ஏன் என் குடும்பத்தையே—அதோகதியாக்கிவிட்டாயே! இந்த நாடகத்தின் இறுதி இன்னும் பின்னல் இருக்கிறதை மறக்காதே: நானும் "பணம்! பணம்!" என்று பறந்தேன். தாய் நாட்டையும், தாய்ப் பாஷையையும், தாய்நாட்டுப் பழக்கத்தையும், முன்னேர்களையும் அடியோடு வெறுத்தேன்: துறந்தேன்: ஆனல் என் கதியும் முடிவும் என்னவாயிற்று பார்த்தாயா! என் பணத்தினுல் நான் அடைந்த பலனைக் கண்டாயா! எனக்கு எமனுக நீ வந்து சேர்ந்தாயே! எனக்கு அப்போது நீதான் எமன் என்று தெரிந்ததா? என் பணத்தால் உன்னை விரட்ட முடிந்ததா! என் பணத்தினுலேயே உன்னை வலிய வலிய விதி இழுத்ததே! அதை இப்போது அறிவதுபோல அப்போது அறிய முடிந்ததா? பணத்தினுல் என் ஜானகியின் உயிரை மீட்க முடிந்ததா? அடே மடையா! நீ சொல்வதற்கு முன்பே நான் வெளியேற நினைத்துவிட்டேன். நீ சொல்லவேண்டிய அவசியமில்லை. என் வயிற்றெரிச்சல் தீர உன்னேடு முறையிடும் சமயத்தையே எதிர்பார்த்திருந்தேன். பணம்! பணம்! என்று பதறிய நாட்களின் சுகம் போதும்: இப்போது எனக்கு புத்தி வந்து நான் கூறுகிறேன்: நீ இனியும் மோசம் போகாதே! நீ பணத்தினுல் பெறமுடியாத பொருள்கள் இன்னும் அனேகம் உள்ளன: ஜாக்ரதை:" என்று ஆக்ரோஷத்துடன் கூறினன்; மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது.

இவன் கூறிய வார்த்தைகளை எதுவும் மணி செவியில் வாங்கவில்லை. இதற்கு மேல்கொண்டு என்ன செய்யலாம் என்ற ஓர் எண்ணத்திலேயே அவனது மனம் லயித்திருந்ததால் இவன் ஏதோ பிதற்றுகிருன் என்று சட்டைசெய்யாது இருந்துவிட்டான். வேலுசாமி கடைசியில் கூறிய வார்த்தைகள் மட்டும் காதில் பட்டதும் சீறி விழுந்தவாறு, "சீச்சீ, ஏழைப் பிணமே! பேசாமல் வெளியே செல்லு. உன் தத்துவம் வேண்டாம்!" என்று கூறி வேலுசாமியைத் தள்ளப் போனன். இதற்குள் வேலுசாமியே தலையில் துணியை முக்காடிட்டுக் கொண்டு போய்விட்டான். அவனுடைய கண்ணீர் கீழே சொட்டிக்கொண்டே போகிறது.

"ஹா! கடவுளே! ஒரு காலத்தில் எத்தனையோ ஆர்வமாயும், ஆநந்தமாயும் 'என்னுடைய வீடு: என்னுடைய வாசல்' என்று நான் அனுபவிக்கும்படிச் செய்துவிட்டு இப்போது என்னைக் கேவலம் ஓர் பிச்சைக்காரப் பயலைப்போல முக்காடுக்குள் மறைந்து செல்லும்படி

யாகச் செய்துவிட்டாயே. பரம்பரை பிச்சைக்காரனுக்கு வெட்கமே இல்லை. பிச்சை எடுப்பதே அவனுக்கு பெரிய கவுரவமான தொழில். என் கதி அதற்கும் உதவாது செய்துவிட்டாயே! என் ஆவியை மட்டும் ஏன் வைத்து ஆட்டுகிருய்? ஏ கிளிகளா! ஏ புருக்களா!.. ஏ பசுக்களா!..செடிகளா! புஷ்பங்களா! கனிகளா!....நான் உங்களுக்கு அதிகாரியாக விருந்த நாள் மறைந்து, அனுதையாய் அடிமையாகவாவது இருந்து உங்களுடன் இன்பமாக சில காலம் பழகினேன்: இப்போது அறவே உங்களை விட்டுச் செல்கிறேன்; என்னைப் போன்ற பாபிகள், சண்டாளர்கள் உலகத்தி லிருப்பார்களா?'' என்று கண்ணீர் பெருகத் தன் பங்களாவிலுள்ள ஒவ்வொன்றையும் பார்த்தான்; விசனித்தான். "சீச்சி! நம்முடைய தென்கிற சுதந்திரத்தையே இழந்தோம்; கண்ணுக்குக் கண்ணுக, உயிருக்கு உயிராகவிருந்த ஜானகியைப் பறிகொடுத்தோம். இவ்விரண்டையும் விடவா இனியொரு விசனம் உண்டு''. என்று மனம் புண்ணுகித் தவித்தவாறு வீதியில் வந்தான்.

அப்போது இராக்கால மாகையினுல் வானம் கரேலென்று கருத்திருந்தது. ஜானகியின் மரணத்தைக் குறித்தும், வேலுசாமியின் கஷ்டத்தைக் கருதியும் வானுலகமே இருண்டுவிட்டது போல ஆகாயத் தோற்றம் இருந்தது.ஆயினும் ஆங்காங்கு சில நட்சத்திரங்கள் மட்டும் மினுக்கு மினுக்கு என்று ப்ரகாசித்ததானது மணியின் அறிவு கெட்ட நிலைமையை—பணப்பேயின் வசமாகிக் கன்னெஞ்சு கொண்டுள்ள நிலைமையைக் கருதி வானம் நகைப்பதுபோலத் தோன்றியது. வேலுசாமி எங்கே சென்றூர் என்றுநாம் கூற வேண்டுமா?... கிணறு,குளம் முதலிய இடங்களுக்குத் தான் சென்றிருப்பார் என்று நினைப்பீர்களோ: அவ்வாறு செல்லவில்லை. நேரே தன் மகளைத் தகனம் செய்தவிடத்திற்கு மெல்லச் சென்றூர்.

வேலுசாமி சென்றதும் மணியன் "அப்பாடா! பிச்சைக்காரப் பயல் துலைந்தான்: என் சரித்திரத்தில் இன்னெரு அத்யாயம் பூர்த்தியாயிற்று. ஆஹா! என்ன வேடிக்கை! இதே மனிதன் இவ் வீட்டின் எஜமானனும்,ஏக சக்ராதிபதியாயும் இருந்த நாள் இறந்து பட்டொழிய இவ் வீட்டிலே இதே மனிதன் அடிமையாக விருந்து அனுதையாக ஓடியும் செல்லும்படியாக ஆய்விட்டதல்லவா! இதற்கெல்லாம் காரணம் என்னுடைய அதிர்ஷ்ட காலமும், சாமர்த்தியமும், பணத்தின் மகிமையுமல்லவா?'' என்று மூடத்தனமாக கர்வத்துடன் எண்ணினுன்.

"அந்தோ! அவ்வாண் குழந்தை உயிருடன் பிறந்திருப்பின் எத்தனை நன்ருக விருக்கும்! அடாடா! அது இறந்துவிட்டதே!...

சேச்சே! இதென்ன பயித்தியக்காரத்தனம்! நாம் மறுபடியும் விவாகம் செய்துகொண்டால் நமக்குப் புத்திரப் பேறு கட்டாயம் கிடைக்கும். உடனே அதற்கு ஏன் ஏற்பாடு செய்யலாகாது?" என்று தனக்குள் பலமாக யோசனை செய்தான். அச்சமயம் அவனுடைய சிநேகிதர்கள் சிலர் அங்கு வந்து இவனுடைய விவாக விஷயமாகவே பேசினார்கள். மணியனுக்கு விவாகத்தில் தீவிரமாக ஆசை உண்டாய்விட்டது.

ஜானகியினுடைய கர்மாதிகள் முடிவதற்குள்ளேயே அவளை அறவே மறந்து விவாகத்திற்குப் பிரயத்தனம் செய்யத் தொடங்கினான். மணியன் பார்ப்பதற்குக் குபேரனாக விளங்கினாலும் அவனுடைய பசையற்ற இருதயத்தின் தன்மையும், காதலற்ற நிலைமையும், ஜானகியை மிருகத்தன்மையோடு நடத்தியதும் அவனுடைய சிநேகிதர்கள் எல்லோருக்கும் தெரியுமாதலால் அவனுடைய பணத்தை மட்டும் கண்டு பெண்ணைக் கொடுக்க இசையவே இல்லை. மணியன் சிலரை வாய் விட்டும் கேட்டுப் பார்த்தான்: அவர்கள் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி மறுத்துவிட்டார்கள்.

பணத்தை மட்டும் கண்டு ஆசைகொண்டு, மணமகன் கிழவனானாலும், நோயாளியானாலும், கொலைபாதகனானாலும் மற்ற எத்தகையோனானாலும் அவற்றைக் கவனிக்காது பெண்ணைக் கொடுக்கத் துணியும் பாபிகள் எத்தனையோ பேர்கள் நம் நாட்டில் இன்னமும் இருக்கிறார்கள். அத்தகையோரில் பெரும்பாலோர் பரம தரித்திரர்களாய் ஒரு வேளைக் கஞ்சிக்கும் பஞ்சாகப் பறக்கும் பேர்வழிகளாய் இருப்பதால்தான் மேற் குறித்தவாறு கிணற்றில் தள்ளுவதற்கு ஒப்பாகவும், கழுத்தை யறுப்பதற்குப் பதிலாயும் தாங்கள் பெற்ற பெண்களையே தாங்கள் செய்வார்கள். இவ்விதம் ஒரு உயிரை சித்திர வதை செய்தேனும் தாம் சுக ஜீவியாக வாழலாம் என்று நினைக்கும் சண்டாளர்கள் சிலர் மணியின் வீட்டிற்கு வலுவில் வரத் தொடங்கினார்கள். ஆனால் பிச்சைக்காரர்கள், ஏழைகள் என்கிற பதத்தைக் கேட்டாலேயே ப்ளேக்கு, காலரா முதலிய கொடிய பயங்கர வியாதிகளைக் கண்டவன்போல நடுங்கி வெறுத்து விலகக்கூடிய மணியன் இவர்களைச் சட்டை செய்வானா! "வேண்டாம்; வேண்டாம்" என்று வீட்டுப் படி ஏறும் முன்னமேயே ஓட்டிவிட்டான். தனக்குச் சரியான பெண் எப்படி கிடைக்கும் என்ற ஏக்கம் பிடித்துவிட்டது.

தனக்கு மிகவும் ஆப்தமான சிநேகிதனின் 5 வயது பிள்ளையொன்றை தன் வீட்டிலேயே கொண்டு வைத்துக்கொண்டு வளர்க்கத் தொடங்கினான். அதையே தன் சொந்தமாக பாவித்து அத

ளுல்தான் சந்தோஷமடையலாம் என்று எண்ணினன். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்ப்பது தன் சொந்த உதிரத்திலுதித்தது போலாகுமா? எந்த அனுபவமும் பட்டாலன்றோ தெரியும்! சில வாரங்கள் வரையில் மணியனிடம் அக் குழந்தை அண்டவே மாட்டேனென்று அழுதது. சற்று நாளடைவில் பிறகு சமாதான மாயிற்று.

பின்னும் சில மாதங்களில் அக் குழந்தையின் பெற்றோர்கள் குழந்தையைத் தனிமையில் விடாமல் யாரேனும் ஒருவர் குழந்தையிடம் இருப்பதுபோல மணியன் வீட்டிலேயே இருக்க வாரம்பித்தார்கள். அச்சமயம் தாங்களே பாதியும், குழந்தையின் மூலம் பாதியுமாக வீட்டிலுள்ள பொருளை விழுங்கி ஏப்பம் விடவாரம்பித்தார்கள். இந்த போதனையில் ருசி கண்ட பையன் எது கிடைப்பினும் திருடிக்கொடுக்க வாரம்பித்துவிட்டான். இந்த உளவு மணியனுக்கு சில நாட்கள் வரையில் தெரியாதிருந்தது.

ஒரு தினம் மணியன் ஸ்நானம் செய்யும் பொருட்டு கைக்கடியாரம், சங்கிலி இரண்டையும் கழட்டி வைத்து விட்டுச் சென்றான். இந்த குழந்தை அந்த கடியாரத்தையும் சங்கிலியையும் திருடி தன் மக்களிடம் கொடுத்ததையும், அவர்கள் பதுங்கிக் கொண்டதையும் மணியனே நேரில் பார்த்துக்கொண்டு வந்துவிட்டான்.

ஆகா! அவனுடைய ஆயுளில் இரண்டாவது தரமாக அன்று தான் அவனுக்கு ஒரு விதமான உணர்ச்சி ஏற்பட்டது. "சீச்சீ! இந்த திருட்டுப் பிள்ளையையா நாம் சொந்தமாக வளர்க்க எண்ணி மோசம் போனோம்! அடாடா!...இவ்விதமான களவு இன்னும் என்னென்ன போய்விட்டதோ தெரியவில்லையே!" என்று வருந்தியவாறு கவனித்ததில் பல பொருள்கள் களவு போயிருந்ததை யறிந்தான். அந் நிமிடமே அக் குழந்தையையும், அதைச் சேர்ந்தோரையும் துரத்திவிட்டான். அதன்மூலம் பெரிய மனஸ்தாபமும் உண்டாகி விட்டது.

"நம்முடைய சொந்தக் குழந்தையாயின் இவ்விதம் செய்யுமா? அதன் சொந்த மனிதர்களிடம் அக் குழந்தை காட்டிய அன்பைப் போல நம்மிடம் நம் குழந்தை உயிரோடிருந்தால் காட்டுமல்லவா? அடாடா! நமக்கு இப்போதல்லவோ தெரிகிறது. பணத்தினால் நீ பெறமுடியாதவை சிலது இருக்கின்றனவென்று ஜான் இறக்குந் தறுவாயிலும் கூறினளல்லவா! பணத்தினால் உன் இறந்த ஆண் குழந்தையை நீ மீட்க முடியாது என்ற கருத்தைக் கொண்டல்லவோ அவள் கூறி இருக்கிறாள்...இருக்கட்டும். எப்படியேனும் பணத்தை

நிறையச் செலவு செய்தே பணத்தின்மூலம் மணம் செய்துகொண்டு ஓர் புத்திரனைப் பெறும் வழியைச் செய்யாது விடப்போவதில்லை.'' என்று சபதம் செய்துகொண்டான். உலகத்தோர் தன்னை மெச்சும் பொருட்டாக ஜானகியின் புகைப் படத்தைப் பெரிதாகச் செய்து அதை ஒழுங்காக மாட்டி இருந்தான்.

மேற் குறித்த சபதம் செய்துகொண்ட பிறகு மணியன் தன்னுடைய விவாகத்திற்குப் பெண் தேவை என்பதை பல பத்திரிகைகளில் பிரசுரித்தான். தன் புகைப் படமும் வெளியிட்டான். ஒரு வாரத்திற்குள் சுமார் நூற்றுக்கணக்கில் பெண்களின் புகைப் படங்களும், கடிதங்களும் நிறைந்துவிட்டன. தூர விருக்கையில் பெண்ணைக் கொடுக்க இசைகிறவர்கள் அருகில் வந்து விஷயத்தைத் தெரிந்துகொண்டதும் தியங்கிவிட்டார்கள்.

கல்யாணத் தரகன் ஒருவன் புகுந்து இவனுக்கு முதல்தாரமான பெண்ணை முடித்து வைப்பதாக மார்பு தட்டிப் பேசி தனக்குத் துகை இவ்வளவு என்பதையும் தீர்மானமாய் முடித்துக் கொண்டான். சுமார் இருபது வயதுக்குக் குறையாத ஓர் அழகிய பெண்ணைக் கொணர்ந்து காட்டி விவாகத்தை நிச்சயஞ் செய்துவிட்டான்.

விவாகமும் முடிந்தது. மணியனுக்கு அப்போதும் தன்னுடைய பணத்தின் பெருமையும், தனக்கு ஒரு ஆண் குழந்தை வேண்டுமென்கிற நோக்கமும் கொண்டிருந்தானேயன்றி காதல் என்பது அவன் இருதயத்தில் உண்டாகவே இல்லை. தனக்கு எப்போது ஆண் குழந்தை பிறக்கும் என்று விவாகமான நிமிடம் முதல் கனவு காண வாரம்பித்தான். சில மாதத்தில் அவன் ஓர் வியாபார விஷயமாக வெளியூருக்குச் செல்ல நேர்ந்தது. புதிய மனைவியை வீட்டில் விட்டுச் சென்றான்.

நாலைந்து நாட்களில் அவன் மீண்டும் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். வீட்டில் வந்தவுடனே வீடு அல்லோல கல்லோலமாக விருந்தது கண்டு விசாரிக்கையில் நேற்றிரவு யாரோ இரண்டு தடியர்கள் வந்ததாயும் அவர்கள் இளைய மனைவியோடு சேர்ந்துகொண்டு வேலைக்காரர்களை எல்லாம் கட்டிப் போட்டுவிட்டு வீட்டிலுள்ள ரொக்கமான பணங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், நகைகள் முதலிய சகலமானவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டதாயும் காலையில் வேலைக்கு வந்தவர்களே கட்டவிழ்த்து விட்டதாயும், பிறகு

பார்க்கையில் இதெல்லாம் தெரிந்ததாயும், போலீஸுக்குத் தகவல் கொடுத்ததாயும் கூறக்கேட்டு இடிவிழுந்துவிட்டான்.

ஆகா! இளைய மனைவியாக வந்தவளே இப்படி கொள்ளை யடித்துக்கொண்டு போய்விட்டாள் என்றது கேட்டதும் ஷாக்கடித் தவனைப் விழுந்து விட்டான். "இனி என் செய்வது. இத்தனை பெரிய மனிதனின் மனைவியே இந்த காரியம் செய்துவிட்டாள் என்று வெளியாருக்குத் தெரியுமாயின் எவ்வளவு அவமானம் உண் டாகும்? ஆகா! இதென்ன விதி இப்படியாகி விட்டதே! என்று வருத்தமுற்றான். தன் மானத்தைக் காத்துக்கொள்ளும் பொருட்டு வேலையாட்களுக் கெல்லாம் பணத்தைக் கொடுத்து இதை வெளி யிடா திருக்கும்படித் திட்டம் செய்தான். மனைவி தாய் வீட்டிற்குச் சென்றிருப்பதாய் சில நாட்கள் கூறிப் பின்னர் அங்கு ஏதோ நோய் கண்டு இறந்து விட்டதாயும் கூறிவிட்டான். உண்மையில் இது அவனுக்கு பெரிய அவமானத்தை உண்டாக்கிவிட்டது.

* * * *

மணியனுக்கு அதற்குமேல் என்ன செய்வதென்று தோன்ற வில்லை. அதற்குமுன் செல்வம் திரட்டுவதி லிருந்த ஓர் பேராவல் அவனை யறியாமலேயே சலிப்புற்று, வெறுப்பு கொண்டு குறையலா யிற்று. வீட்டில் தன்னையும், தன் பணியாட்களையும் தவிர வேறு ஒரு உயரிய பொருள் உண்டா? தன் வேலை நிமித்தம் வெளியில் சென்று வீட்டிற்கு வந்தால் அவனுக்கு ஏதோ ஒரு விதமான திகி லும், கவலையும், ஏக்கமும் குடி புகுந்து வருத்தத் தொடங்கியது. இதுகாறும் தான் எத்தனையோ சந்தோஷமாகக் காலங் கழித்து வந்த நாட்களின் நினைவே அவனுக்குத் தோன்றவில்லை. இப்போதுள்ள ஏக்கம் பிடித்த நிலைமைதான் நீடித்ததாகத் தோன்றியது.

"அந்தரங்கமாகப் பேசுவதற்கும், அன்பொழுக அழைப்பதற் கும், மனச் சந்துஷ்டி யடையவும், சாந்தி யடையவும், ஆநந்தமாக விளையாடவும் ஒரு குழந்தையுண்டா! ஹா! இதென்ன திடீரென்று மனத்திற்கு இத்தகைய ஏக்கம் பிடித்துவிட்டதே! ஒரு குழந் தைக்கு பாக்யம் செய்யாமல் போய்விட்டோமே! பணத்தினால் பெற முடியாத வஸ்துக்கள் இருப்பதாகத் தெரிவித்ததில் ஒன்று குழந்தை தான் என்று இப்போது பல தடவைகளில் தோன்றி என்ன உப யோகம்? ஏன் இப்படி என்னையறியாது கண்ணீர் வழிகின்றது? சீச்சீ இதெல்லாம் அல்பங்கள், ஏழைகள், பிச்சைக்காரர்கள் முதலியவர்கள் செய்யும் வேலையல்லவா! என்னையும் எனக்குள்ள பணத்தையும் எடை போட்டால் என்னைவிடப் பத்து பங்கு எடையிலுயர்ந்த தனத்

திற்கு அதிபதியாக நானிருக்கையில் எனக்கென்ன கவலை? இதென்ன மூடத்தனம்!" என்று மீண்டும் பணத்தின் ஆசையாகிய பாசி வந்து மூடிவிட்டது. உடனே பழய மமதை என்கிற கவசத்தில் மறைந்தான்.

அவன் சிநேகிதன் வீட்டில் ஒரு கல்யாணத்திற்கு அழைப்பு வந்திருந்தது. அதற்காக அங்கு சென்றான். செல்லும்போதே அங்கு எத்தனையோ பேர்கள் தம்பதிகளாய்—ஜோடி ஜோடியாய்—குழந்தைகளுடன் சந்தோஷமாக வந்து சேருவதைக் கண்ட மணியனுக்கு முன்புபோல ஒரு ஏக்கம் பின்னும் உண்டாயது. அம்மாதிரி வருவோர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். எண்ணாததும் எண்ணி மனக் கோட்டை கட்டிக்கொண்டே இருந்தான். அங்கு வந்தவர்களுடன் அதிகமாகப் பேசவும் மனம் சகிக்கவில்லையாதலால் சற்று நேரத்திற்கெல்லாம் எழுந்து சென்றுவிட்டான். குளத்தில் பாசி மூடுவதும் விலகுவதும் எத்தனை சகஜமோ, அத்தனை சகஜமாக மணியனின் நிலைமையும் ஆயிற்று.

பின்பொரு தினம் ஓர் கலாசாலையில் ஆண்டு விழா நடத்துதற்குத் தலைமை வகிக்க மணியனை நியமித்திருந்தார்கள். மணியனும் படாடோபமாக அலங்கரித்துக்கொண்டு கலாசாலைக்கு வந்து சேர்ந்தான். அது ஆண் பெண் ஆகிய இரு பாலர்களும் சேர்ந்து படிக்கும் கலாசாலை யாகையினால் மாணவர்கள் மாணவிகள் எல்லோரும் நிறையக் குழுமி யிருந்தார்கள். இன்னும் சீமான்களும் சீமாட்டிகளும் அளவற்ற பேர்கள் வந்திருந்தார்கள்.

முதலில் கடவுள் வணக்கமாக சில மாணவர்களும் மாணவிகளும் பாடினார்கள். பிறகு வழக்கமான நடவடிக்கைகள் நடக்கத் தொடங்கின. 'ஆடும் மயிலோ! அன்னப் பேடோ! பாடுங் குயிலோ! பச்சைக் கிளியோ!' என்று ஐயுறும்படி ஓர் பெண்மணி வெகு காம்பீரமான தோற்றத்துடன் மேடைமேல் ஏறிப் பிரஸங்கம் செய்ய வாரம்பித்தாள். 'தேனோ! பாகோ! திகட்டாக் கனியோ! குழலோ யாழோ! கோகில த்வனியோ!' என்னும்படியாக அவள் தொனியை எடுத்து வெகு மாதுர்யமாகப் பேச வாரம்பித்ததும், சபையில் ஒரு சிறு துரும்பு விழுந்தாலும் சத்தம் செய்யக் கூடிய நிச்சப்தமான நிலைமை ஏற்பட்டது.

அப் பெண்மணி எடுத்துக்கொண்ட விஷயமோ பணத்திற்கும் குணத்திற்கும் உள்ள தாரதம்மியத்தைப்பற்றியதாகும். குணத்தினால் உண்டாகும் விசேஷங்களும் மதிப்பும், அழியாக் கீர்த்தியும், அன்பின் விரிவும், ஈகையின் தன்மையும் சவிஸ்தாரமாகக்

கூறிப் பணத்தினல் உண்டாகும் மமதையும், பராமரிப்பும், அன்பற்ற இருதயம் பாலை வனமாகி விடும் நிலைமையும், பணத்தினுல் மட்டும் மனிதன் தேர்ந்துவிட முடியாது; அதற்கு முக்கிய துணையாக நல்ல குணத்தையும் உடையவனுக விருந்தால்தான் சகல சுகமும் இகத் திலும் பரத்திலும் அடையலாம் என்றும் சொல்லிப் பின்னர் "மாணவர்களே! மாணவிகளே! நீங்கள் எத்தகைய சாமர்த்திய சாலிகளாய், புத்திசாலிகளாய் விளங்கிய போதிலும் அன்பிற் கும் கருணைக்கும் உத்தம குணத்திற்கும் உங்கள் இருதயத்தில் ஒரு பங்கு தனித்த இடத்தைக் கொடுத்து விட்டுப் பிறகு உங்கள் அதிகார தோரணையோ, பணஞ் சம்பாதிக்கும் வகையோ செய்யுங்கள். மேற் குறித்த விஷயங்களை விலக்கி விட்டுப் பணம் பணம்! என்று பிசாசு பிடித்து அலைந்து பணத்தை மாத்திரம் சேர்த்துக்கொள்ள நினைத்தீர்களானுல்—சேர்ப்பீர்களானுல்—அது எத்தன்மையதாக விருக்கும் தெரியுமா! ஓர் பெரிய பாலை வனத்தில் நடுப் பகலில் ஒரு மனிதன் அகப்பட்டுக்கொண்டு கையில் நிறைய காசுடன் தவிப்பனுகில் அந்த காசினுல் அந்த பாலை வனத்தில் அவ னுக்கு என்ன உபயோகம் உண்டாகும். யோசித்துப் பாருங்கள். அதே போல பெரியோர் விச்வாசம், தெய்வ பக்தி, அன்பு, கருணை, நற்குணம் முதலியவற்றை மனத்தில் கொள்ளாவிடில் அம் மனிதனுடைய இருதயம் பாலை வனத்திற்கு ஒப்புதான். அவன் இகத்திலும் சுக ஜீவியாக வாழ முடியாது; பரத்திலும் கர்மி என் றும், அன்பற்ற கட்டை என்றும் கடவுளால் விலக்கப் படுவான். அப்போது பணம் நம்மைக் காக்குமா! ஒரு போதும் காக்காது. அதே பணத்தை சத் விஷயத்தில் செலவு செய்து ஏழைகளுக்கு உதவி, மனமாறக் கஞ்சி வார்த்திருப்பின் அந்த கருணையே நமக்கு இகத்திலும் த்ருப்தி; பரத்திலும் நன்மை. ஆதலால் நீங்கள் உங்கள் இருதயத்தைப் பாலை வனமாகச் செய்யாதீர்கள்.'' என்று வெங்கல மணி யடித்தது போலப் பேசிவிட்டு அமர்ந்தாள்.

அந்த மாதரசி பேசும்போது கரகோஷம் அண்டத்தை அளா வியது. அந்த அம்மாளின் பிரசங்கத்தைக் கொண்டாடாதவர்க ளில்லை. இச் சமயத்தில் நமது மணியின் மனம் எவ்விதமிருக்கும். மணியின் ஜன்மாவில் கண்டறியாத ஓர் மாறுதல் முன்பு ஜான் இறக்குந் தறுவாயில் உண்டாயதென்று முன்பே கூறி இருக்கி ருேம். இன்று இங்கு வந்ததும் முதல் வரிசை சோபாவில் அமர்ந் திருந்த அந் நங்கையை மணி பார்த்தான். அந்த மாதரசியின் அதி ரூபலாவண்யம் மணியின் மனத்தில் கள்ளத்தனமாகப் பதிந்தது; எனினும் அவன் அதை யொரு அலக்ஷ்யமாக எண்ணி அமர்ந்தான்.

அம் மடவன்னம் பேச வாரம்பித்ததும் அவள் ஒவ்வொரு விஷயத்தை தக்க மேற்கோள்களுடன் எடுத்துக் கூறுவதும்


B.N.Rao.

தனக்கே—தன் செய்கைக்கே—மிக்க பொருத்தமா யிருக்கிற தென்று அவனை யறியாமலேயே எண்ணிவிட்டான். தன்னைக் குத்திச் சொல்வதுபோல மனத்தில் பொத்துகிறது. அம் மாதின் பிரஸங்கத்தைக் கேட்கக்கேட்க அவனுடைய நிலைமையும் சற்று மாறிக் கொண்டே வந்தது. கடுமையான பாலை வனம்போல இருதயத்தை ஒப்பிட்டுக் கூறும்போது மணியனுக்கு சகுந்தலாவின் உருவமும், ஜானின் உருவமும், அவளிடம் உதித்த இரு குழந்தைகளின் உருவங்களும், வேல்சாமியின் உருவமும் ஏக காலத்தில் அவனது அகக் கண் முன்பு தோன்றி "அம்மணீ! பிரசங்கம் செய்யும் தாயே! நாங்கள் எல்லாம் இதோ இம் மனிதனின் இருதயமாகிய பாலை வனத்தில் அகப்பட்டுத்தான் இறந்தோம்; அழிந்தோம்.'' என்று கூறுவதுபோலத் தோன்றுகிறது. அதே சமயம் தன் தாயின் மீது ஓயின் பாட்டிலை எறிந்த காட்சியும் அவன் கண் முன்பு தோன்றுகின்றது. அப்போதெல்லாம் அவனை திடும், திடும் என்று அலறச் செய்கின்றது. மனத்தில் சொல்ல வறியாத சங்கடம் உண்டாகி வதைக்கின்றது. இதை யொருவாறு சகித்துக்கொண்டு, அன்றைய காரியத்தைத் தன்னுடைய மாறுதலை வெளியிடாது முடிக்க வேண்டுமே என்று எண்ணிப் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

பிறகு இன்னும் யார் யாரோ பேசினார்கள். கூட்டமும் மங்களகரமாகக் கலைந்தது. மணியனும் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டான். முதலில் பிரஸங்கம் செய்த அம் மாது சிரோன்மணியிடம் சொல்லிக் கொள்ள அவன் மனம் தூண்டியது. உடனே அவளைத் தேடினான்; ஸ்திரீகளின் கூட்டத்தில் நின்றிருந்தாள். மணியனுக்கு அவளோடு சொல்லிக்கொண்டு செல்ல வேண்டுமென்று கொள்ளை ஆசை கூத்தாடுகிறது. ஆனால் அத்தனை ஸ்திரீகளின் மத்தியில் எப்படிக் கூறுவது என்று எண்ணினான். "அவள் திரும்பிப் பார்ப்பாளோ!' என்று சற்று அவளையே கவனித்தான். அவள் திரும்பவே இல்லை. நேரமாய் விட்டதால் மணியன் அரை மனத்தோடு வீடு வந்து சேர்ந்தான்.

அன்று அவனுக்கு வீட்டுக்குள் நுழைவது புலிக் குகையில் நுழைவது போலத் தோன்றியது. காரணம் அவனே அறியமாட்டான். வீட்டில் வந்து ஆடம்பரமான உடையைக் கழற்றி எறிந்துவிட்டு உட்கார்ந்தான். அவனுடைய மனது தத்தளிப்பை யடைந்துவிட்டதே யன்றி அமைதியை ஒரு சிறிதும் காண முடியவில்லை. அவன் கண்களுக்கு வேறு எதுவுமே தோன்றவில்லை. அம் மாதரசியின் பிம்பமும், அவள் அழகிய தொனியும், அவள் மருண்ட பார்வையுமே தோன்றி மணியனை வாட்டுகின்றன. இந்த மாறுதலான

உணர்ச்சியை அவன் ஆயுளில் இந்த நிமிடம் வரையில் அனுபவித்த தில்லை; கண்டதுமில்லை. அவன் கண்களை மூடிக்கொண்டு சாய்வான நாற்காலியில் சாய்ந்தான்;சித்தம் தடுமாறுகிறது. வேறு பொருளோ; வேறு எண்ணமோ; வேறு உருவமோ; வேறு விஷயமோ! அவன் மனத்தில் உதிக்கவே இல்லை. அந்த மின்னல் கொடியாளின் துல்லியமான, விசாலமான மானைப் போன்று மருண்டு மருண்டு சுழலமிடும் கண்களும், சந்திர பிம்பம் போன்ற முகமும் நேரில் தெரிகின்றன.

காதல், அன்பு, அந்தரங்க ப்ரீதி, தெய்வீகமாக உதிக்கும் உவமை இல்லாத காதல் எப்படி இருக்கும் என்பதை இதுபரியந்தம் சற்றும் அறியாது கட்டை போலிருந்த மணியனின் இருதயத்தில் திடீரென்று காதல் விதை யொன்று விழுந்து முளைக்கத் தொடங்கி விட்டதென்றால் அதையவன் இதற்கு முன்பு எவ்விதம் கண்டிருக்கக்கூடும்? துக்கத்தின் தன்மை இத்தகையது என்ற ஓர் சிறிது உணர்ச்சியை ஜானின் மரணத்தறுவாயில் கண்டான். இந்த காதல் உணர்ச்சியின் அனுபவத்தை இன்றே மணியன் முதல் முதலாகக் கண்டதனால் நிலை கலங்குகின்றான்.

அன்றிரவு போஜனமே கொள்ளவில்லை. எதிலும் மனம் நாடவில்லை. பித்தன் போல எழுந்து அப்படியும் இப்படியும் உலாவுகிறான். "சீச்சீ! நாம் அவள் விலாசத்தையேனும் தெரிந்துகொள்ளாமல் முட்டாள்தனமாக வந்துவிட்டேனே! ஐயோ! அம்மங்கையை மீண்டும் எப்பொழுது பார்ப்பது? இதென்ன நூதன எண்ணமும் உணர்ச்சிகளும் என்னைக் கட்டுப் படுத்துகின்றனவே! என் செய்வேன்!" என்று தவித்தான்: அபாரமான மாறுதல் அவனை இம்சிக்கின்றது. மோட்டாரிலமர்ந்து தெருத்தெருவாய்த் தானே ஓட்டியவாறு சுற்றினான். "சீச்சீ! இதென்ன அலைகிறோம்!" என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டு வீட்டிற்கு வந்தான். தூக்கம் பிடிக்காமல் புரண்டான்.

இப்படியே சில நாட்களாயின. மணியனுக்கு வஸந்தாவினிடமுண்டான காதலை மறக்கவே முடியவில்லை. ஏதோ பலத்த நோய் கண்டவன் போலாய்விட்டான். சில நாட்களுக்குள்ளேயே அவன் நிலைமையையும் மன வேதனையையும் சகிக்கக் கூடாமல் பித்தன் போலப் பேசுவதும், விழிப்பதும், சதா அம் மங்கை நல்லாளின் முகத்தையே நினைத்துருகுவதுமாக ஆய்விட்டான். "ஹா! ஹா! காதல் என்பது இத்தனை கொடியதா! இவ்வளவு வீரம் பெற்றதா! மனிதனை அடியோடு மாற்றி விடும் சக்தி பெற்றதா! மனத்தை—இருதயத்தை—என் மனிதனையே—தனக்கு அடிமையாக்கிக் கொள்ளும்

அபாரமான வசியம் பெற்றதா! என்னுயுட் காலத்தில் நான் இத் தகைய வேதனையை ஒரு கணமேனும் அனுபவித் தறியேனே! ஐயோ! அப் பெண்மணியை மணந்து கொள்ளாவிடில் என்னுயிரே போய்விடுமோ, அன்றி பித்தமே பிடித்துவிடுமோ தெரியவில்லையே! உருவம் இன்னதென்று தெரியாமல் மனிதனை இவ்விதம் வாட்டும் சாமர்த்தியம் பெற்ற இக் காதலின் மகிமை இப்போதல்லவோ தெரிகிறது. அம்மாதரசி உபன்யாசம் செய்ததுபோல என் னிருத யம் பாலைவனமாகவன்றோ இருந்தது. அவ்வனத்தில் ஓர் செடி—காதல் செடி—முளைப்பதற்கு இடம் உண்டாகுமா? என்ன ஆச்சரி யம்! சகுந்தலாவுடன் எத்தனையோ பிரியமாய் நெருங்கிப் பழகி னேன். அப்போதெல்லாம் இத்தகைய நிலைமையை ஒரு வினடி கூடக் கண்டதில்லை. ஜானகியுடன் கணவனாகவே இருந்து அவளை நடத்தினேன். அப்போதும் ஒரு நாளிலாவது நான் இந்த உண்மை யான காதலைக் கண்டறிந்ததில்லை. அத்தகைய எனக்கு—என் இருதயத்தில்—இப்போதுதான் காதல் உதயமாகிறது போலும். நான் என்ன விதமான பாடு பட்டேனும் அக் காரிகையை மணந்து களிக்காமல் விடுவதில்லை. எனக்கு உள்ள ஏராளமான பணம் இந்த காரியத்தைக் கட்டாயம் செய்து வைக்கும். இதற்கு நான் ஓர் மனிதனின் உதவியை ஏன் கொள்ள வேண்டும்?" என்று ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

அன்றே ஒரு யோசனை தோன்றியது. அன்று ஆண்டு விழா வைபவத்தில் எல்லோரையும் புகைப்படம் எடுத்தது நினைவிற்கு வந்தது. அந்த படம் எடுத்த போட்டோக்ராபரிடம் சென்று அன்று எடுத்த புகைப் படம் ஒன்று வாங்கிக் கொண்டு வந்தான். அப் படத்தில் வஸந்தாவின் உருவம் வெகு நன்ருக விழுந்திருந்தது. அதைத் தன்னறையில் மாட்டிக் கொண்டான். இந்த வேதனை அதிகரித்த பின்னர் பணம், பணம், என்று பறக்கும் ஆசை சற்று ஒடுங்கிற்று. அன்னுகார நித்திரையே ஒழிந்து மனிதன் மெலி வுற் ருன் எனின் மற்றதைக் கூற வேண்டுமா!

வஸந்தவல்லி எந்த கூட்டத்தில், எந்த சபையில் பேசப் போகிருள், பாடப் போகிருள் என்று சமாச்சாரம் தெரிந்ததும் இவனுக்கு அழைப்புப் பத்திரம் வராவிடினும் ஏதோ ஒரு முகாந் திரத்தைக் கொண்டு அங்கு சென்று கண் குளிரப் பார்ப்பான். அங்கு எப்படியாவது அம் மாதரசியைக் கண்டு பேச எண்ணுவான். அவள் ஸ்திரீகளின் கூட்டத்திலேயே இருந்து சென்று விடுவா ளாகையினுல் இவனுக்கு அதுவும் முடியாது போயிற்று.

ஒரு தினம் வஸந்தவல்லி வாலிபர்களின் சங்கம் ஒன்றில் பேசு வாள் என்றதை யறிந்த மணி அங்கும் சென்ருன். மணியன் பெரிய

மனிதனுகையினுல் அவனுக்கு எல்லா விடங்களிலிருந்தும் அழைப் புப் பத்திரங்கள் வரும். அந்த சங்கத் தலைவருடன் அன்று மணி பேசிக் கொண்டிருக்கையில் வஸந்தவல்லி வந்தாள். அம் மாதைக் கண்டவுடன் தலைவர் அவளை வரவேற்று ஓர் ஆசனத்திலமரச் செய் துப் பின் மணியிடம் வந்தார்:

இதையே ஓர் சாக்காகக் கொண்ட மணியன் "இந்தம்மாள் யார் சார்! இவர்கள் பேசுவதும் பாடுவதும் வெகு அழகாக விருக் கிறது. அனேக இடங்களில் இவர்கள் அடிக்கடி பேசுவதாக பேப் பரில் பார்க்கிறேன்.'' என்றுன்.

தலைவர்:—இந்த அம்மாள் வெகு புத்திசாலி, மகா குணவதி. இவர்களுடைய சரிதையே ஓர் கதைபோல விருக்கும். இவளுடைய பிதா மகா கொடியன், குடியன், மடையன். அவன் வீட்டையும், மக்களையும் கவனிக்கவே மாட்டான். வறுமையோ சொல்லத் திற மில்லை. ஒரு தினம் ஏதேனும் வேலைக்குச் சென்றுல் பிறகு 10 தினம் போகமாட்டான். அந்த ஒரு தினத்துச் சம்பளத்தையும் பூராவும் குடித்து விட்டு வருவான். குழந்தைகள் மட்டும் நாலைந்து பிறந்து விட்டன. இந்த அம்மாளின் தாயார் நாலு வீடுகளில் வேலை செய்து அதில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு அரை வயிறு கஞ்சி வார்த்து குழந்தைகளைக் காப்பாற்றி வந்தாள். குடியனின் இம்சை சகிக்காமல் வெகு கஷ்டப்பட்டும் இந்த ஒரு பெண்ணைத் தவிர மற்றவைகள் வறுமையினுலேயே இறந்து விட்டன.

இவள் பிதாவின் சினேகிதனுகிய ஒரு கள்ளுக் கடை சொந்தக் காரனுக்கு மூன்றுவது மனைவி இறந்துவிட்டாள். அந்தக் கிழவனுக் குப் பெண்ணைக் கொடுத்துவிட்டால் தனக்கு ஏராளமான குடி அகப்படும்; தன் குடும்பமும் பிழைத்துவிடும்; தானும் உட்கார்ந்த படி குடிப்பதும், உண்பதும், உறங்குவதுமாகக் காலத்தை ஓட்ட லாம் என்று தீர்மானித்து விட்டான். ஏற்கெனவே இவன் மொந் தைக்கள் குடித்துச் சந்தி சிரித்த பாக்கி அவனிடம் கடன் ஏற் பட்டு விட்டது. அதையும் அவன் விட்டுவிடுவான் என்று முடிவு கட்டி விட்டான்.

இயற்கையிலேயே அதிரூபவதியாய் விளங்கும் வஸந்தவல் லிக்கு அப்போது வேங்கம்மா என்று பெயர். அவளுக்கு வயது 10 தான் நிரம்பி இருந்தது. அவளழகைக் கண்டு யார்தான் மணக்க மாட்டார்கள். அதிலும் நான்காவது தாரமாக ஓர் கள்ளுக் கடைக்காரன் மணப்பதற்குக் கசப்பா! எத்தனை ஏழை மக்களின் வயிறெரிந்த—குடி கெடுத்த—பணங்களோ இக் கள்ளுக் கடைக்கா

னுக்குச் சேர்ந்து அவன் மாடி வீடும், ஜோடி நகையுமாக ஆய்விட்டான். குடியர்களின் பணம் பல துளி பெரு வெள்ளமாக அவனுக்குச் சேருவதும் தாங்கள் பஞ்சையாய்—பனுதையாய்—என்றும் அழிவிலாதபடி கஞ்சிக்கலேயும் தன்மையும் அவர்களுக்குத் தெரிகிறதா! இல்லே; இல்லே: இன்னும் தெரியவில்லே. நாளேயும் தெரியப் போகிறதோ, இல்லேயோ?

கஷ்ட மனுபவிப்பதற்கே பிறந்துள்ள அவன் மனேவி என்ன செய்வாள் பாவம்! குடிகாரன், கள்ளுக்காரனிடம் தன் மகளேக் கொடுப்பதாகக் கூறிவிட்டதாயும் அவனுக்கே கட்டாயங் கொடுத்து விவாகத்தை நடத்திவிட வேண்டுமென்றும் கூறினுன். பேரிடி இடிப்பதுபோன்ற இவ் வார்த்தையைக் கேட்டதும் மனேவி நடுநடுங்கினுள். "ஐயோ! 50 வயது கிழவனுக்கு 10 வயது குழந்தையைக் கொடுத்து விவாகத்தைச் செய்விப்பதைவிட ஓர் பாழுங் கிணற்றில் தள்ளிக் கொன்று விடலாமே! உயிர் போய் விட்ட பின் குழந்தை நிம்மதியாக இருப்பாள். உயிர் போகமுடாத கிணற்றில் தள்ளி சித்திரவதை செய்ய பெற்ற அப்பனுகிய உன் மனம் துணிந்ததா! இந்த வார்த்தையை என்னிடம் கூறத் தைரியமாய் எப்படி வந்தாய்? என்ன நடந்தாலும் சரி; நான் கொடுக்கமாட்டேன். அக் கிழக் கட்டேலே போறவனுக்குத் தக்க கிழட்டுப் பிணம் ஏதேனும் கிடைக்கும் பச்சைக் கிளி போன்ற என் குழந்தையை நான் கொடுக்கவே மாட்டேன்." என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள்.

அப்போது தான் மொந்தை மொந்தையாகக் குடித்துவிட்டு வெறி பிடித்து வந்ததனுல் இவள் கூறிய வார்த்தையைக் கேட்டதும், அடங்காத ஆத்திரங் கொண்டு "ஆஹா! நான் கூறுவதற்குப் பதில் சொல்லுகிருயா; எதிர்த்துப் பேசுகிருயா?" என்று கூறியவாறு அருகிலிருந்த உலக்கையை எடுத்து அவள் தலேயிலும், முதுகிலும் கண்ணு மண்ணு தெரியாமல் நொறுக்கிவிட்டான்.

அருகி லிருப்போர்கள் தடுக்கச் சென்றதில் அவர்கள் மீதும் அடிகள் பலமாக விழுந்துவிட்டன. 10 வயது இச் சிறுமி தடுக்கச் சென்றபோது இவள் மீதும் உலக்கை யடி விழுந்து மூர்ச்சையாகி விட்டாள். இதற்குள் கும்பல் கூடிவிட்டது. போலீஸாரும் வந்து கூடி விட்டார்கள். இவன் முரட்டுத்தனமாய் அடித்த வேகத்தில் மனேவி 10 நிமிடத்திற் கெல்லாம் உயிர் துறந்தாள். கூட விருந்தவர்களுக்குப் பட்ட அடியினுல் சிலருக்குக் காலும் கையும் ஊனமாய் விட்டது. உடனே அவனேப் போலீஸார் கைது செய்து இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

இப் பெண்ணையும் மற்றவர்களையும் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். இப் பெண் அந்த உடம்புடன் மூன்று மாதம் ஆஸ்பத்திரியில் கிடந்தாள். கேஸ் விசாரணை யாகி அக் குடிகாரனுக்குத் தீபாந்திர தண்டனையாகி விட்டது. ஆஸ்பத்திரியில் நாகபூஷணம் என்று ஒரு வயதான நர்ஸ் இருந்தாள். அந்த அம்மாளின் வார்ட்டில்தான் இக் குழந்தை படுத்திருந்தாள். இவளுடைய குணமும், அழகும், புத்திசாலித்தனமும், அந்த அம்மாளைக் கவர்ந்தன. இப் பெண்ணின் சரிதை முற்றும் அவளுக்குத் தெரியுமாதலால் அந்த அம்மாள் இந்தப் பெண்ணின் மேல் இரக்கங் கொண்டு தானே அவளை ஆதரிப்பதாய் ஏற்றுக் கொண்டாள்.

அந்த அம்மாள் நரஸாகையினால் பல பெரிய மனிதர்கள் வீட்டிற்குச் சென்று பழக்கமுண்டு. அவர்களின் சிபார்சின் பேரில் இவளை விருத்திக்குக் கொண்டு வரலாம் என்று நிச்சயித்துப் பின் தன்னுடனேயே அழைத்துச் சென்றாள். பிறகு இவளைப் படிக்க வைத்தான். வெங்கம்மாள் என்ற பெயர் குடிகாரனோடு மறைந்து விட்டது. வஸந்தவல்லி என்று பெயர் விளங்கலாயிற்று. வஸந்தவல்லி தன் பெற்றோரின் கதி இப்படி யாகிவிட்டதை எண்ணி அதே விசனங் கொண்டு ஏங்கிவிட்டாள்.

0048
இவளுடைய புத்திசாலித்தனத்திற்கு இவளுக்கு ஸ்காலர்ஷிப்பு கிடைத்தது; அதைக் கொண்டு படித்து வந்தாள். பள்ளிக்கூடத்து மற்ற பெண்களோடு அனாவசியமாய்ச் சேராமலும் சமர்த்தாயும், பொறுக்கினார்ப் போலச் சிலருடன் மட்டும் சிநேகம் செய்தும் நாளடைவில்தான் 'இனி துக்கிப்பதில் பயனில்லை. இனிமேல்தான் காலங் கடத்துதற்கு நல்ல மார்க்கம் செய்து கொள்ள வேண்டு'மென்னும் சுய புத்தி பெற்றாள். அதன்மேல் படிப்பிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து பாஸ் செய்தாள். அதிகம் படிக்கவில்லை. S. S. L. C. மட்டும் பாஸ் செய்துவிட்டு ட்ரெயினிங்கு பாஸ் செய்துப் பின் ஓர் பெண்கள் பாடசாலையில் உபாத்திமைத் தொழில் கொண்டிருக்கிறாள். இவளுக்கு இன்னும் விவாக மாகவில்லை. அந்த நர்ஸ் இவளைத் தன் தொழிலிலேயே புகுத்த நினைத்தாள். ஆனால் இவள் மனம் உபாத்திமைத் தொழிலிலேயே நாடியதால் அதை இதிலேயே விட்டாள். இயற்கையிலேயே சங்கீத ஞானமும் உண்டு. அதோடு பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொண்டதில் பின்னும் தேர்ச்சி பெற்றாள். அதனால் அனேகருக்கு மதிப்பாக விளங்குகிறாள். சில பெரிய மனிதர்களின் வீட்டில் சங்கீதம் கற்றுக் கொடுக்கிறாள். அவர்கள் மோட்டார் அனுப்பி அழைத்துப் போகிறார்கள்; கொண்டு விடுகிறார்கள்.

210048